Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு II விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி 03 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 05 (18.12.2004) சனிக்கிழமை இதழ்:79

# ஜே.வி.பியின் நியாயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது!

## ஜப்பானியத் தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

சமாதான முயற்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஜே.வி.பியினர் நடந்துகொள்வதாக உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு ஜே.வி.பி. தரப்பில் கொள்கை விளக்கம் அளிக்கப்பட்டபோதும் –

ஜே.வி.பி. தொடர்பான தமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லையென ஜப்பானியத் தூதுவர் அகியோ சுட்டா மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களிடம் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அகியோ சுட்டா –

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளால் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைக்கு ஜே.வி.பி. கொள்கை விளக்கம் கொடுத்து நியாயப்படுத்த முனைந்திருக்கிறது.

ஆனால், இது தொடர்பான எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடே சமாதான நகர்வில் தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் வெளியிட்ட கூட்டறிக்கையில் அகியோ சுட்டாவும் ஒப்பமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சமாதான முயற்சிகளுக்கு தடையாக ஜே.வி.பியே இருந்துவருவதாக உதவிவழங்கும் நாடுகளால் வெளியிடப்பட்ட அறிக்கை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (01)

# கோவில் கேணிக்குள் வீழ்ந்து 13 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - வியாபாரிமூலை பிள்ளையார் கோவில் கேணிக்குள் வீழ்ந்த 13 வயதுச் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்தான். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

வியாபாரிமூலையைச் சேர்ந்த தேவராஜா தேவகுமார் என்ற 13 வயதுச் சிறுவன் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் அருகிலுள்ள பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற பூசைக்குச் சென்றிருந் தான். ஆனால், பின்னர் வீடு திரும்பவில்லை.

சிறிய தாயார் மற்றும் பெரிய தாயார் வீடுகளில் திரைப்படம் பார்த்துவிட்டு அங்கேயே தங்கிவிடுவது வழக்கம் என்பதால் தந்தையார் சிறுவனைத் தேடிச்செல்லவில்லை.

அதேவேளை, நேற்றுக்காலை குறித்த கேணிக்கு குளிக்கச்சென்ற பெண்ணொருவர் கேணிக்குள் சிறுவனின் சடலம் ஒன்று மிதப்பதைக் கண்டார்.

இதையடுத்து அயலவர்களால் ஆலயக் கேணிக்குள் இருந்து சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது. சிறுவன் இறந்தபோது சேட் அணிந்திருந்ததால் கேணிக்குள் தவறி வீழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சிறுவனின் சடலத்தைப் பார்வையிட்ட பருத்தித்துறைப் பொலிஸார் அதனை பிரேத பரிசோதனைக்காக மந்திகை ஆதாரவைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்த சிறுவன் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் 8 ஆம் ஆண்டு மாணவன் என்று தெரியவருகிறது.(12)

# மீண்டும் யுத்தம் புரியும் நோக்கம் அரசுக்கு இல்லை!

## அமைச்சர் அனுரா கூறுகிறார்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் யுத்தம் புரியும் நோக்கம் அரசாங்கத்துக்குக்கிடையாதென அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக சந்திரிகா பதவியேற்று பத்து ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் கேகாலை நகர மண்டபத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டை பிளவுபடுத்தாமலும், எந்தவொரு சமூகத்துக்கும் அநீதி இழைக்காத வகையி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த

# இந்திய விமானத்தில் கோளாறு அவசரமாகத் தரையிறக்கப்பட்டது!

இலங்கை கடற்படையுடன் இணைந்து இந்தியக் கடலோரக் காவற்படை நேற்றுமுன்தினம் நடத்திய கூட்டுப்பயிற்சி நடவடிக்கையின்போது இந்திய விமானம் ஒன்றில் பழுது ஏற்பட்டு அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இலங்கை கடற்படையுடன் இணைந்து மேற்குக் கடற்பிராந்திய தளத்தில் இந்திய கடலோரக் காவற்படை 'எக்ஷத்' என்ற பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டது. இந்தப் பயிற்சிக்காக இந்தியாவின் துர்க்காபாய் தேஷ்முக், சாரங் ஆகிய கப்பல்களும் செடெக் ஹெலி ஒன்றும் மற்றும் கண்காணிப்பு விமானம் ஒன்றும் இலங்கைக்கு வந்திருந்தன.

பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இந்தப் பயிற்சியில் பங்கேற்ற அதிவேகக் கண்காணிப்பு விமானத்தில் திடீரெனக் கோளாறு ஏற்பட்டது.

இதையடுத்து விமானம் அவசரமாக கோவாவிலுள்ள டபொலிம் கடற்படை விமான ஓடுதளத்தில் தரையிறக்கப்பட்டது. அவசரமாக விமானம் தரையிறக் கப்பட்டதால் தரையில் மோதி சிறுசேதம் அடைந்தது.

தயார் நிலையிலிருந்த தீயணைப்புப் படையினர் விமான நிலையச் செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தச் சம்பவத்தில் விமானி அதிர்ச்சியால் மயக்கமுற்ற நிலையில் இராணுவ மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வல்லை ஊடான போக்குவரத்து தற்காலிகமாக தடை!

(வடமராட்சி)

வடமராட்சியையும் வலிகாமத்தையும் இணைக்கும் ஒரே ஒரு போக்குவரத்துப் பாதையான வல்லைப்பாலம் திருத்த வேலைகளுக்காக இன்றிரவு மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்லைப் பாலத்தை புனரமைக்கும் நடவடிக்கைகள் இடம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சங்கமித்தை விகாரைக்கு மாதகலில் அடிக்கல்!

மாதகல் பகுதியில் சங்கமித்த விகாரை அமைக்கப்படவிருப்பதாகவும், இதற்கான ஏற்பாடுகளை கடற்படையினர் மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

கடற்படைத் தளபதியும், கூட்டுப்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியின் உத்தரவுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சொல்ஹெய்ம் நேற்றுமாலை இந்தியாவுக்கு பயணமானார்!

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று மாலை இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்தும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நெருக்கமான உறவுகளை பாதுகாக்கும் நோக்குடன் கடந்த திங்களன்று சொல்ஹெய்ம் இலங்கை வந்திருந்தார்.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோருடன் அவர் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின் போது அவர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் குறித்து நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நீண்டநேரம் பேச்சுக்களை நடத்தியிருந்தபோதும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கான இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில் நேற்றுமாலை அவர் இந்தியாவுக்குப் பயணமானார்.

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் இருதரப்பினருடனான சந்திப்பின்போது முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் குறித்து இந்திய அரசியல் தலைவர்களுக்கு சொல்ஹெய்ம் விளக்கிக் கூறிய பின்னர், நோர்வேக்குத் திரும்புவார் என நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

# முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு கதையாடல் பயிற்சிப் பட்டறை

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் .(T.R.O) யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் இணைப்பாளர்களுடன் அரங்க செயற்பாடுகளுடன் அரங்க செயற்பாட்டு குழுவினரின் கதையாடல் அரங்கப்பட்டறை ஒன்று மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள தியாக சீலம் பூங்காவிலுள்ள யாழ்.முன்பள்ளி பயிற்சி நிலையத்தில் இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடத்தவுள்ளது.

இங்கு முள்பள்ளி ஆசிரியர் எதிர்நோக்கும் பிரச்சினை, முன்பள்ளி நடைமுறைகளில் பெற்றோரின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான திறன்களை வளர்த்துக் கொள்ளுதல், பிள்ளைகளுடைய திறன் மதிப்பிடல் போன்ற விடயங்கள் கதையாடப்படவுள்ளன.

# பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள் யாழ்.பல்கலைக்கழகத்தில்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டமானது வறிய பெண்களின் பொருளாதார மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு தே.தேவானந்தின் "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" எனும் நாடாக ஆற்றுகை நாளை காலை 10.30 மணிக்கும் மாலை 3.30 மணிக்கும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. காலை நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுபினர் ரவிராஜ், கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்கள். மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் யோ.கலைவிழி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்கள். அதனைத் தொடர்ந்து நாடக நிகழ்வு நடைபெறும்.

# யாழ்.மாவட்ட சிறுவர்களின் நாடக விழா நாளை

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் யாழ்.மாவட்ட சிறுவர்களின் நாடகவிழா நாளை காலை 9.30 மணிக்கு யா.உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த விழாவிற்கு கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா, யுனிசெவ் உதவித்திட்டமிடல் அலுவலர் ஆ.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் யாழ்.மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரம்பக் கல்வி அபிவிருத்திப்பிரிவு தெரிவித்துள்ளது. (12)

## சமதான வழிதேடி கருத்தரங்கு

விழுதுகள் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை மாலை 4 மணிக்கு சமாதான முறை வழிதேடி என்ற பொருளிலான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் கலாநிதி. ரஞ்சித் அமரசிங்க, அரசின் சமாதான செயலகத்தைச் சேர்ந்த கலாநிதி லக்ஷ்மன் மாரசிங்க ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

## முறைசாராக் கல்வி மாணவர்களுக்கான பரீட்சை

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்களுக்கான இந்த வருடத்துக்கான கல்வி ஆண்டுக்குரிய பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும். பரீட் சார்த்திகளுக்கான அனுமதி அட்டை, நேரசூசி என்பன மாணவர்கள் கற்ற பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பெற்று பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ் வரன் தெரிவித்தார்.

## திருவெம்பாவை உற்சவங்கள்

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு அருள் மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆலயத்தில் வருடாந்த மார்கழித் திருவெம்பாவை உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (82)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு அருள் மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் வருடாந்த மார்கழித் திருவெம்பாவை உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (82)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் வருடாந்த மார்கழித் திருவெம்பாவை உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (82)

★ ★ ★

(கோண்டாவில்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் திருவெம்பாவை உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

தொடர்ந்து நடைபெறவுள்ள தினங்களில் 6 ஆம் நாள் வியாழக் கிழமை பிட்டுப் பூசையும் 10ஆம் நாள் திங்கட்கிழமை தீர்த்த நீராடலும் இடம்பெறும். தினமும் அதிகாலைவேளை அடியார்களால் திருப்பாவை திருப்பள்ளியெழுச்சிப் பதிகங்கள் ஓதி தெருவீதி வலம் வருதலும் நடைபெறவுள்ளது. (82)


திறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந், சினேகா, நடித்த
போஸ் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK - 3

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதினவெளியீடான
அர்ஜுன், சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த





ஜெய் சூர்யா
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா யாழ்.பெயின் காடன் - 326, K.K.S.றோட் யாழ்பாணம்


# தேசிய விழாவில் இன்று கொல் ஈனும் கொற்றம்

(சுதுமலை)

திருமறைக் கலாமன்ற நாடகக் குழு தேசிய நாடக விழாவில் கூத்துரு நாடகத்தை ஆற்றுகை செய்யவுள்ளது. கொழும்பு ஜோன். டீ.சில்வா மண்டபத்தில் நடைபெற்றுவரும் தேசிய நாடக விழாவில் இன்று 'கொல் ஈனும் கொற்றம்' எனும் கூத்துரு நாடகமும் இளவாலை கலாமன்ற கலைஞர்களின் மனுவிலங்கு என்னும் கூத்தும் அரங்கேறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.ஜோன்சன் ராஜ்குமார் எழுதி நெறியாள்கை செய்துள்ள இந்தக் கூத்துருவில் 35ற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு பற்றுகின்றனர்.

இதுவரை ஆற்றுகை செய்யாத வகையில் பிரதேசவாரியான கூத்துரு மரபுகளை உள்ளடக்கிய தான கூத்துரு நாடகத்தில் மன்னார், முல்லைத்தீவு பாங்கும், சிந்துநடை பாங்கும், மட்டக்களப்பு பாங்கும், யாழ்ப்பாண தென்மோடியும், வட்டுக்கோட்டை வடமோடியையும் கொண்டு இராமாயணத்தின் ஒரு பகுதியையே கொல் ஈனும் கொற்றம் கூத்துரு நாடகமாக ஆற்றுகை செய்யவுள்ளதாக நெறியாளர் யோ.ஜோன்சன் ராஜ்குமார் தெரிவித்துள்ளார். (91,41)

## ஒளிவிழா

இளவாலை புனித யூதாததேயு ஆலய வருடாந்த ஒளிவிழா நிகழ்வானது நாளை இரவு 7 மணிக்கு மறையாசிரியர் கொ.பி.சுஜித்திரா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விற்கு மறைக்கல்வி நடுநிலையப் பொறுப்பாளர் அருட்தந்தை மௌலீஸ் அடிகளார் கலந்துகொள்வார். (41)

## மாணவர் அறிமுகமும் விரிவுரை ஆரம்பமும்

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பட்டபின் கல்வி டிப்ளோமா கற்கும் மாணவர்களுக்கான அறிமுக வைபவமும் அதனை தொடர்ந்து விரிவுரைகளும் இன்று காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.பிராந்திய இயக்குநர் எந்திரி ச.ஞானேந்திரா தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய நிலையத்தில் கல்விச் செயற்பாடுகளுக்கான இணைப்பாளராக புதிதாக நியமனம் பெற்றுள்ள பேராசிரியர் மோகனதாஸ் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.


ராஜா யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
சரத்குமார்,வடிவேலு, நிகிதா நடித்த
சத்ரபதி (ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
பிரசன்னா, நவ்யா, பிரகாஸ்ராஜ் (குளிரூட்டப்பட்டது) நடித்த அழகிய தீயே (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
தினசரி இரவு 9.00 (பு.நே) மட்டும்
THE MUMMY RETURNS ஆங்கிலப் படம்
விரைவில்:- THE PASSION OF THE CHRIST
(இயேசு தேவரின் வாழ்வின் இறுதி 12 மணிநேரக் கதை.)



## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வலம்புரிச் சங்கு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ் (மருந்துக்கடை), 76, பெரியகடை, யாழ்ப்பாணம். T.P.: 222 2912

### மணமக்கள் தேவை

லண்டன், கனடா, ஜேர்மனியில் வசிக்கும் மணமகன் / மணமகள் விபரங்கள் எம்மிடம் உண்டு. படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். சங்கானையில் - காலை - 071 2565096, யாழ்ப்பாணத்தில் - மாலை - 077 6176476. (திருமண தரகர் கட்டணம் இல்லை)


### தவறிவிட்டது

செங்குந்தா வீதி, முள்ளியவளையைச் சேர்ந்த தியாகராஜா நக்கீரன் என்பவரது அடையாள அட்டை (842572142V) வெள்ளிக்கிழமை (17.12.2004) கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் கல்வியன்காட்டிங்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். T.P.: 0773013231


பாதிக்கப்பட்ட பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான நாடக ஆற்றுகை

யுத்த காலங்களில் பெண்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும், மாறிய மனித மனங்களின் எண்ணப்பாடுகளையும் சித்தரிக்கும்






எழுத்துரு, நெறியாள்கை : தே.தேவானந்த்
இசையமைப்பு : த.றொபேட்
தயாரிப்பு : செயற்திறன் அரங்க இயக்கம்

காலம் : 19.12.2004 (ஞாயிறு)
காலை 10.30
மாலை 3.30

இடம் :
கைலாசபதி கலையரங்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

TRRO LIMITED
அன்பளிப்பு : ரூபா 100, ரூபா 50
(C/3480)
Active Theatre Movement



வெளிவந்துவிட்டது

மார்கழி நூஞ்சொட்டு
Palmerah Poem Anthology

கிடைக்கும் இடங்கள்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
மக்மிலன் புத்தகசாலை
(C/ 3482)



வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை
யாழ்.டிப்போ சிற்றுண்டிச்சாலை

கேள்விப் பத்திரம்

மேற்படி சிற்றுண்டிச்சாலையை 01.01.2005ல் இருந்து நாடாத்துவதற்குத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

31.12.2004ற்கு முன்னதாக நேரில் தொடர்புகொள்ளவும்.

பொது முகாமையாளர்,
வட- பிராந்தியப் போக்குவரத்துச்சபை,
கோண்டாவில்


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### செல்வராஜா மணிவண்ணன்

அவர்கள் 16.12.2004 அன்று சாவடைந்துள்ளார் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(C/ 3485) சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

# இராணுவ மயப்படுத்தப்படும் வெளிநாட்டுத் தூதரகங்கள்

ஈழத் தமிழர் அதிகமாகச் செறிந்து வாழும் நாடுகளிலிருக்கும் இலங்கை அரசின் தூதரகங்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் நேரடிப் பின்னணியைக் கொண்டதாக மாற்றப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈழத்தமிழர்கள் அதிகமாக வாழும் கனடா, பிரித்தானியா மற்றும் இந்தோனேசியா போன்ற இடங்களுக்கு முன்னைநாள் இராணுவத் தளபதிகள் தூதுவர்களாக நியமிக்கப்படவுள்ள அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசு இராணுவ தந்திரோபாய நகர்வை, ஐரோப்பியத் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டிருப்பதாக வெளிநாட்டு ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தோனேசிய நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதிகளில் ஒருவரும், தற்போதைய சர்வதேச புலனாய்வுப் பிரிவுக்கு வேலை செய்பவருமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப்பட் டுள்ளார். இவர் பல காலமாக அவுஸ்ரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றி, தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்குத் தீவிரமாகச் செயற்பட்டவர்.

இதேநேரம் கனடாவுக்கான இலங்கைத் தூதுவராக சர்வதேச புலனாய்வுப் பிரிவுக்குத் தற்போது ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் சந்திரானந்த டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்புக்கு கடத்தப்பட்ட கோதுமைமா கண்டுபிடிப்பு

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குச் சட்ட விரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட 11 ஆயிரத்து 500 கிலோ கோதுமைமா, புறக்கோட்டையில் நுகர்வோர் பாதுகாப்பு சபை அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் அவுஸ்ரேலியாவால் நிவாரணமாக வழங்கப்பட்ட கோதுமை மாவை, கிழக்கில் விநியோகம் செய்யாது, சிங்களப் பகுதிகளில் விநியோகிக்க அல்லது விற்பனை செய்யும் நோக்கத்துடன் இரண்டு லொறிகளில் மட்டக்களப்பிலிருந்து இந்தக் கோதுமைமா எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலொன்றின் பேரில் பொலிஸாரின் உதவியுடன் குறிப்பிட்ட இடம் முற்றுகையிடப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இரு லொறிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

# பெண் அரசாங்க ஊழியர்களுக்கு கர்ப்பகாலத்தில் வேலைநேரம் குறைப்பு!

அரச துறைகளில் பணியாற்றும் பெண் ஊழியர்களுக்குக் கர்ப்பமடைந்து 5 மாதங்களின் பின்னர் கடமை நேரத்தில் ஒரு மணி நேரம் குறைக்கப்பட்டுள்ளது.

கடமை நேரம் ஆரம்பமாகி அரை மணித்தியாலம் தாமதமாக வருகை தரவும், கடமை நேர முடிவுக்கு அரை மணித்தியாலம் முன்னராக அலுவலகத்திலிருந்து புறப்படவும் இடமளிக்கப்படும். இந்தச் சலுகை, பிரசவ விடுமுறை பெறும் வரை வழங்கப்படவுள்ளது.

இவை தவிர மேலும் பல சலுகைகள் அடங்கிய 3/2004 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

பெண் அரச ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட விடுமுறைகள் முடிவடைந்த பின், அவரின் சேவைக் காலத்தினுள் குழந்தை பிறப்பதற்கு ஆகக்கூடிய மாத காலத்துக்கு சம்பளமற்ற விசேட விடுமுறை பெற்றுக் கொள்ளலாம்.

குழந்தை அசாதாரண நிலையில் பிறந்து, பராமரிப்பு தொடர்ந்து தேவையெனின் விசேட விடுமுறை வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட 84 நாட்கள் பிரசவ விடுமுறைக் காலம் முடிவுற்ற பின்னர், தனது குழந்தைக்குத் தாய்ப்பாலூட்டுவதற்கு வழமையாக அலுவலகத்திலிருந்து புறப்படும் நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன் அலுவலகத்திலிருந்து புறப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இந்த அனுமதி - குழந்தையின் வயது 6 மாதங்கள் பூர்த்தியாகும்வரை மட்டுமே வழங்கப்படும்.

குழந்தை பிறந்து 4 வாரங்களுக்கு முன்னர், மீண்டும் கடமையேற்க அனுமதிக்கப்படமாட்டாது. விடுமுறை பெறுவதற்கு ஒரு வைத்திய சான்றிதழையோ அல்லது குழந்தையின் பிறப்புச் சான்றிதழையோ சமர்ப்பித்தல் போதுமானது எனவும் அந்தச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# மட்டக்களப்பு வெள்ள அழிவு நிவாரணத்தில் பாரபட்சம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அறுபத்திரெண்டாயிரம் குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு நிவாரண உதவிக்காகப் பதினைந்து மில்லியன் ரூபா கோரிய போதும், நான்கு மில்லியனே கிடைத்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் வே. சண்முகம் தெரிவித்தார்.

கிடைத்திருக்கும் நிதி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க போதுமானதல்ல என, சமூக சேவைகள் அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் தொடர்ச்சியாக மழை பெய்வதால் வெள்ளத்தால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரிக்குமெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை சமூக சேவைகள் அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் குழு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வந்து, வெள்ளத்தால் பாதிப்புற்ற பகுதிகளைப் பார்வையிட்டனர்.



நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

# ஐக்கிய தேசிய கட்சி மீது அரசு தொடர் குற்றச்சாட்டு

## மகேஸ்வரன் எம்.பி. கண்டனம்



அரசாங்கம் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதை நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கண்டித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி கடந்த சில நாட்களாக வரவு - செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தின்போது, நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சில சம்பவங்களைக் குறிப்பிட்டு, அதில் என் மீது பல குற்றச் சாட்டுக்களை முன்வைத்திருக்கிறார்.

இதை முற்றிலும் நிராகரிக்கிறேன். ஜனாதிபதி ஏழுமாத காலத்துக்கு முன்பாக அவரது அமைச்சரவையில் இருக்கின்ற அவருடைய பிரதி அமைச்சர்கள், அமைச்சர்கள் புரிந்த குற்றச் சாட்டுக்கள், அவருடைய அமைசர்கள் நாடாளுமன்றத்தில் இரண்டு தரம் செங்க கோலை எடுத்துச் சென்ற சம்பவங்களை மறந்துவிடக் கூடாது.

இந்தச் சம்பவத்தில் அமைச்சர் ஒருவர் பிரதான பங்கு வகித்துள்ளார். அதுமாத்திரமல்ல, சபாநாயகர் தெரிவின்போது பௌத்த பிக்குகளை வாக்களிக்க விடாது தடுத்ததோடு, எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தங்கள் சார்பாக வாக்களிப்பதற்கு நிர்ப்பந்திக்கும் வகையிலும் அரசாங்கத் தரப்பில் ஈடுபட்டார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திஸநாயக்கவை விடுவிக்கக்கோரி நாளை கொழும்பில் கூட்டம்

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எஸ்.பி. திஸநாயக்கவை விடுவிக்கக் கோரும் கூட்டமொன்று, நாளை ஞாயிற்றுக் கிழமை ஹைட்பாக் கோணரில் நடைபெறவுள்ளது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கூட்டத்தில், ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்குக்காக அனைத்து அரசியல் கட்சிகளும் இணையவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எஸ்.பி.திஸநாயக்கவை விடுவிக்கக்கோரும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி, தற்சமயம் மாவனல்லவில் இருந்து வரக்காபொல வரையில் நகர்ந்துள்ளது.

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மனோ விஜயரட்ண கருத்துத் தெரிவிக்கையில் -

ஹங்குராங்கெட்டவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி - தற்சமயம் மாவனல்லையைக் கடந்துள்ளதாகவும், இதில் பெருமளவான மக்கள் பங்கேற்றுள்ளனர் எனவும் -

எனவே இது அரசாங்கத்துக்கப் பாரிய சவாலைவிடுக்கும் ஒரு பேரணியாக இருக்கப் போகிறது எனத் தெரிவித்தார்.

# போக்குவரத்துச் சபை நட்டத்தில் இயங்க ஊழியர்களின் நேர்மையின்மையே காரணம்

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை போக்குவரத்துச் சபை நட்டத்தில் இயங்குவதற்கும், பல டிப்போக்கள் மூடப்பட்டமைக்கும் பல தரப்பட்ட காரணங்கள் கூறப்பட்டாலும், அந்த நிறுவனத்தில் கடமை புரியும் ஊழியர்களின் நேர்மையீனமே பிரதான காரணம் என, போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி காலை மாத்தளை களுதாவளையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான வேலைத் தளத்தில் ரயர் நிரப்பும், தொழிற்சாலைப் பிரிவும், உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் பிரிவும், பஸ்களைப் பழுது பார்க்கும் பிரிவு ஆகியவறறைத் திறந்து வைத்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பத்தாண்டு பதவிக் காலம் நிறைவடைவதை முன்னிட்டு, நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்திப் புரட்சித் திட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பஸ் ஒன்று பயணிகள இல்லாமலோ அல்லது குறைந்த பயணிகளுடன் செல்வதையோ நம்மால் காணமுடியாதுள்ளது. பயணம் செய்யும் அனைவருக்கும் பயணச்சீட்டு வழங்கப்பட்டு, பணமும் வசூலிக்கப்படுகிறது. ஆனால் இந்தப் பணம் முழுவதும் டிப்போக்களில் செலுத்தப்படுவதில்லை. இது போன்ற நேர்மையினம் சகல மாவட்டங்களிலும் நிலவுவது கண்டறியப்பட்டுள்ளது. முப்பத்தைந்து சதவீதத்துக்கு அதிகமான வருமானம் வீணடிக்கப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

இதன் காரணமாக ஊழியர்களின் சம்பளத்தை உரியவாறு செலுத்த முடியாததுடன், அவ்வப்போது பழுதடையும் பஸ்களை உடன் பழுது பார்க்கும் சேவைக்கு விடமுடியாத துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகிறது. இதனால் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் 37 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எப்போதாவது திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஒரு வீதியூடான பஸ்சேவையில் நாளொன்றுக்கு ரூபா ஏழாயிரம் முதல் ரூபா பத்தாயிரம் வரை மேலதிக வருமானம் கிடைப்பது கண்டறியப் பட்டுள்ளது.

ஒரு நாட்டின் அபிவிருத்திப் போக்குவரத்து சேவை மிக முக்கியம். எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும் ஒரு நிறுவனத்தில் கடமை புரியும் ஊழியர்கள் நேர்மையாகத் தமது பணிகளைச் செய்வது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட்
# 179 ஓட்டங்களுக்குள் பாகிஸ்தான் சுருண்டது



(சிட்னி)

பேர்த்தில் நடைபெற்றுவரும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 179 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி- 8 விக்கெட் இழப்புக்கு 357 ஓட்டங்களை எடுத்தநிலையில் முதல்நாள் ஆட்டம் நிறைவடைந்தது.

இந்த நிலையில் நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் தொடங்கியது. லாங்கரும், கஸ்பரோவிச்சும் இணைந்து சற்றுநேரமே ஆடிய போதும் - 4 ஓட்டங்களுடன் கஸ்பரோவிச் ஆட்டமிழந்தார்.

பின்னர் மக்ரா களமிறங்கிய சற்றுநேரம் நின்றுபிடித்து ஆடி 381 ஓட்டங்களைப் பெற்றநிலையில் தொடக்க ஆட்டக்காரரான லாங்கர் ஆட்டமிழந்தார். 3 சிக்சர்கள், 19 பவுண்டரிகளுடன் 191 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சமியின் பந்துவீச்சில் அவர் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் அக்தர் 5 விக்கெட்டுக்களையும், முகமட் சமி 3 விக்கெட்டுக்களையும், அப்துல் ரசாக் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இதனையடுத்து பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. ஆனால், பாகிஸ்தான் அணியினர் அவுஸ்ரேலிய அணியினரின் பந்துவீச்சுக்குத் தாக்குப்பிடிக்கமுடியாமல் தவித்தனர்.

சல்மான் பட் 17 ஓட்டங்கள் மட்டுமே பெற்ற நிலையில் கஸ்பரோவிச்சின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அணியின் ஸ்கோர் 45 ஆக இருந்தபோது இரண்டாவது விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது. 18 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் இம்ரான் பர்கத், ஜிலெஸ்பியின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடி



கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக அணித் தலைவர் இன்ஸமாம் உல் ஹக் ஒரேயொரு ஓட்டதைப் பெற்றநிலையில் தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார். இவ



ரைக் கஸ்பரோவிச் போல்டாக்கினார். இதையடுத்து நிதானமாக நின்று ஆடிக்கொண்டிருந்த யுனுஸகானும், ஷேன் வோனின் பந்துவீச்சில் ஜிலெஸ்பியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

யுனுஸ்கான் 99 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 42 ஓட்டங்களைப் பெற்றார். இதன்பின்னர் 179 ஓட்டங்களை எடுப்பதற்குள் பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

யுகானா - 1, அப்துல் ரசாக்- 21, கம்ரன் அக்மல் - 21, முகமட் சமி - 29, முகமட் கலில் - 0, அகதர் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். கனேரியா 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் கஸ்பரோவிச் 5 விக்கெட்டுக்களையும், வோன் 3 விக்கெட்டுக்களையும், மக்ரா, ஜிலெஸ்பி ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து இரண்டாவது இனிங்சில் அவுஸ்ரேலிய அணி ஆட ஆரம்பித்தது. 3 ஓவர்களில் இந்த அணி 15 ஓட்டங் களை நேற்றைய ஆட்டநேர முடிவில் பெற்றிருந்தது.



பெங்களூரில் கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற பெடரேஷன் கோப்பை உதைபந்தாட்டத்தின்போது மைதானத்திலேயே உயிரிழந்த கிறிஸ்டியானோ ஜீனியரின் உடல், பிரேசிலில் உள்ள பிரேசிலியாவில் புதன்கிழமை தகனம் செய்யப்பட்டது. அப்போது அவரது உடலைப்பார்த்து சோகமே உருவாகக் காட்சியளிக்கும் தாய் மரியஜேசி பெரைரா மனைவி ஜூலியானடி லிமா.

# இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரைக் கைப்பற்றுவோம்!
## அத்தப்பத்து தெரிவிப்பு



(கொழும்பு)

நியு,ஸிலாந்து அணியை சொந்த மண்ணில் வீழ்த்துவது கடினமாக இருந்தாலும், இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தித் தொடரைக் கைப்பற்ற முயற்சிப்போம் என்று இலங்கை அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து தெரிவித்தார்.

நியூஸிலாந்துடன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் பங்கேற்பதற்காக நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து புறப்படமுன்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எங்களைப்போல நியூஸிலாந்து அணியில் சிறந்த நட்சத்திர வீரர்கள் கிடையாது. ஆனாலும், சிறப்பாக விளையாடக்கூடிய அணி அது.

குறிப்பாகச் சொந்த மண்ணில் நியூஸிலாந்தை வீழ்த்துவது கடினம். அதேபோல கடந்த சில மாதங்களாக எமது அணி சிறப்பாக விளையாடிவருகிறது. எங்கள் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரைக் கைப்பற்ற முயற்சிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

நியூஸிலாந்து அணியுடனான முதல்போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகும். இதனையடுத்து டிசெம்பர் 29, ஜனவரி 2, ஜனவரி 4, ஜனவரி 8 ஆம் திகதிகளில் அடுத்தடுத்து போட்டிகள் நடைபெறும்.

# முதல்தர கிரிக்கெட்டிலிருந்து வெங்கடபதி ராஜு ஓய்வு!

(ஹைதராபாத்)

முதல்தர கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக ஹைதராபாதைச் சேர்ந்த சுழல்பந்து வீச்சாளர் எஸ்.எல்.வெங்கடபதி ராஜு அறிவித்துள்ளார். அஸாருதீன், டெண்டுல்கர் ஆகியோரது தலைமையின் கீழ் 7 ஆண்டுகள் விளையாடியுள்ள ராஜு - 28 டெஸ்ட் போட்டிகளில் 93 விக்கட்டுகளை (சராசரி 30.72) கைப்பற்றியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக 12 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதே அவரது சிறப்பு.

ஒருநாள் போட்டிகளில் 53 ஆட்டங்களில் 63 விக்கெட்டுகளைச் கைப்பற்றியுள்ளார். சராசரி 31.96. 1992 மற்றும் 96 இல் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளில் விளையாடியுள்ளார் ராஜு - சுமார் 20 ஆண்டுகாலம் முதல்தரக் கிரிக்கெட்டில் விளையாடி, 102 ரஞ்சிபோட்டிகளில் 367 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இவரது சராசரி 24.15.

## விளையாட்டு

# பொப் இசைப் பாடகரை கோர்னிவோவா திருமணம்

(வொஷிங்ரன்)

அமெரிக்காவைச் சேர்ந்த பொப் இசைப் பாடகர் என்ரிக் இல்லெசியாவை ரஷ்யாவின் ரெனிஸ் நட்சத்திர வீராங்கனை அன்ன கோர்னிகோவா திருமணம் செய்துள்ளார்.

இவர்களது திருமணம் கடந்த மாதம் மெக்ஸிக்கோவில் ரகசியமாக நடைபெற்றதாகவும், நெருக்கமானவர்கள் மட்டுமே அதில் கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புளோரிடாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நலநிதிய ரெனிஸ் போட்டியின்போது திருமணம் செய்துகொண்டதற்கு அடையாளமாக கோர்னிகோவா கையில் மோதிரம் அணிந்திருந்தது தெரிய வந்துள்ளது என சமீபத்தில் வெளியான அமெரிக்க வாரப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

29 வயதாகும் என்ரிக் சாதாரணமானவர் அல்ல. மிகவும் வசீகரமானவர். அதனால் திருமணம் செய்து



கொண்டேன் என திருமணம் குறித்து கோர்னிகோவா கூறியதாகத் தெரிய வருகிறது.

## பங்களாதேஷுக்கு எதிரான
# ராவிட், கம்பீர் சதங்களில் இந்தியா 334 ஓட்டம் குவிப்பு



(டாக்கா)

சிட்டகொங்கில் நேற்று ஆரம்பமான பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கம்பீர் மற்றும் ராவிட்டின் அபார ஆட்டத்தினால் இந்திய அணி 2 விக்கெட் இழப்புக்கு 334 ஓட்டங்கள் என்ற பலமான நிலையை எட்டியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வென்ற கங்கூலி தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார். முதல் டெஸ்டில் ஆடிய வீரர்களே இந்த டெஸ்டில் ஆடினார்கள். இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை

பங்களாதேஷ் அணியில் 3 மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. அந்த அணியில் முதல் டெஸ்டில் ஆடிய ரஜின்சலாக், பாஷியா, ரகுமான் ஆகியோர் நீக்கப்பட்டனர். இவர்களுக்குப் பதிலாக அகமது, ஜுபையர், உசைன் சேர்க்கப்பட்டனர்.

தொடக்க ஆட்டக்காரர்களாகக் ஷேவாக்கும், கம்பீரும் களமிறங்கினார்கள். ஸ்கோர் 14 ஆக இருந்தபோது - ஷேவாக், பஷார் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 10 ஓட்டங்கள் மட்டுமே பெற்றிருந்தார். ராவிட் இரண்டாவது விக்கெட்டுக்கு ஜோடியாகக் கம்பீருடன் இணைந்தார். இருவரும் அடித்து ஆடினார்கள்.

ஸ்கோர் 88 ஆக இருந்தபோது கம்பீர் அரைச்சதம் அடித்தார். அவா 60 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் அரைச்சதத்தைக் கடந்தார். இது அவரது இரண்டாவது அரைச்சதமாகும்.



26.2 ஆவது ஓவரில் இஸ்லாம் ரானா வீசிய பந்தை டிராவிட் பவுண்டரிக்கு விரட்டினார். இதனால் இந்தியா 100 ஓட்டங்களைக் கடந்தது. மதிய உணவு இடைவேளை வரை இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 106 ஓட்டங்களை எடுத்திருந்தது. கம்பீர் 56 ஓட்டங்களுடனும், டிராவிட் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்கமாமல் இருந்தனர்.

உணவு இடைவேளைக்கு பிறகு இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். 33 ஆவது ஓவரில் ராவிட் அரைச்சதம் அடித்தார். இது அவரது 36 ஆவது அரைச்சதமாகும். ராவிட் 95



பந்துகளில் 8 பவுண்டரியுடன் அரைச்சதத்தைக் கடந்தார். அப்போது அணியின் ஸ்கோர் 119 ஆக இருந்தது.

ஸ்கோர் 189 ஆக இருந்தபோது சிறப்பாக ஆடி வந்த கம்பீர் சதம் அடித்தார். இது அவரது முதல் சதமாகும். கம்பீர் 131 பந்துகளில் 16 பவுண்டரிகளுடன் சதத்தைக் கடந்தார். அதனைத் தொடர்ந்து மறுமுனையில் இருந்த ராவிட்டும் சதம் அடித்தார். இது ராவிட்டின் 18 ஆவது சதமாகும்.

தொடர்ந்து அடிய கம்பீர் 139 ஆவது ஓட்டத்தில் போல்டானார். அவர் 196 பந்துகளில் 19 பவுண்டரிகளுடன் 139 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அவரைத் தொடர்ந்து டெண்டுல்கர் களமிறங்கினார். இருவரும் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருநதனர். முதல் நாள் ஆட்ட முடிவில் இந்தியா 2 விக்கெட் இழப்பிற்கு 334 ஓட்டங்களைக் குவித்து நல்ல நிலையில் உள்ளது. ராவிட் 275 பந்துகளில் 21 பவுண்டரிகளுடன் 145 ஓட்டங்களையும், டெண்டுல்கர் 54 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 36 ஓட்டங்களுடனும் களத்தில் உளளனர்.

சித்திரக்கதை

# சின்னாவின் கனவு

கதை
ஓவியம்
ந. யருண்




இங்கே மடிக்கவும்



# துருவெளி

## சிறுவர் அரங்கம்



**அன்புக்குரிய சிறுவர்களே!**

இன்றைய சிறுவர்கள் தான் நாளைய பெரியவர்கள். அதனால் தான் நல்ல பழக்கவழக்கங்கள், நற்பண்புகளைச் சிறிய வயதிலேயே பழகிக்கொள்ள வேண்டும் என பெரியவர்கள் சொல்லுவார்கள்.

இளம் வயதில் எந்த விடயமும் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகிறது. எனவே சிறுவயதிலிருந்தே நல்ல பழக்கவழக்கங்கள், நற்பண்புகளை பழக்கப்படுத்தி வரவேண்டும். இவை காலப் போக்கில் சிறுவர்களாகிய உங்களிடம் ஆழமாகப் பதிந்துவிடும்.

இதன் நல்ல பலாபலன்களை நீங்கள் பெரியவர்களாகும் போது உணர்ந்து கொள்வீர்கள்

– பாசமுடன் சாரு அக்கா



### எங்கள் தமிழ்மொழி

எங்கள் தமிழ் மொழி
எங்கள் தமிழ் மொழி
எழுதப்படித்திட இனிய மொழி
கட்டுரை, கவிதை வடித்திடவும்
கதைகள் எழுதிக் குவித்திடவும்
நல்ல தமிழ் மொழி
நல்ல தமிழ் மொழி
நல்ல தமிழ் மொழியே
அகில உலகமும் போற்றிடும்
எங்கள்
அன்னைத் தமிழ் மொழியே.

- கிருபா

# விடுகதையும் விடைகளும்



1. தலைகீழாகத் தொங்குவான் தலை சுற்றினால் நமக்குத் தென்றலாக வருவான்: அவன் யார்?
2. சின்னச்சின்ன டப்பா சிங்கார டப்பா யாராலும் திறக்கமுடியாத டப்பா அது என்ன டப்பா?
3. வெள்ளை மைதானத்தில் வேகமாக ஓடுவான். தலையைச் சீவினால் கழுத்தை நீட்டுவான். அவன் யார்?
4. காட்டில் தொங்கும் பொட்டலம். காவல் நிறைந்த பொட்டலம். அது என்ன?
5. ஒற்றைக்கால் கொண்டவனைத் தலைக்கு மேலே தூக்கிச் செல்வார்கள். அது என்ன?
6. வெள்ளைக்குதிரையும், கறுப்புக் குதிரையும் மாறிமாறி ஓடுது. பிடிக்க முடியவில்லை. அது என்ன?

## விடைகள்

1. மின்விசிறி
2. முட்டை
3. பென்சில்
4. தேன்கூடு
5. குடை
6. பகல் - இரவு



உங்கள் கைவண்ணம்



வே. பார்த்தீபன்
தரம் - 8
பளை மத்திய கல்லூரி.



ச. அர்ச்சனா
தரம் - 8
இனுவில் மத்திய கல்லூரி.



# எறும்பின் சுற்றுலா

அழகிய ஆறு ஒன்றிருந்தது. அந்த ஆற்றோரமாய்ப் பெரிய அரசமரம் ஒன்றிருந்தது. அம்மரத்தின் கீழ் ஒரு கோவில் இருந்தது. அந்தக் கோவில் ஓரமாய் எறும்புகளின் புற்று இருந்தது.

அதில் உள்ள ஒரு எறும்பு மட்டும் தினமும் கரையில் நின்று, படகில் போகும் மக்களைப் பார்க்கும். நாமும் இந்தப் படகில் போய் ஊரைச் சுற்றிப் பார்க்கவேண்டும். ஆனால் படகில் என்னை எப்படி ஏற்று வார்கள். யாராவது என்னைக் கொன்றுவிட்டால் ஐயோ....? என்று தினமும் நினைத்துக் கொண்டு இருந்தது.

ஒருநாள் படகோட்டி வருவதற்கு முன் படகில் போய் ஒளிந்து கொண்டது எறும்பு. படகோட்டி இருவரில் ஒருவர் மூக்குப்பொடி போடும் பழக்கம் உடையவர். மற்றொருவர் சீனி வியாபாரி.

படகு பாதி ஆற்றில் போய்க்கொண்டிருந்தது. படகோட்டி துடுப்பைத் தண்ணீரில் போடும்போது. தண்ணீர் தெறித்து எறும்பின்மீது பட்டது. ஐயோ.... என்ன இது என்று நினைத்த எறும்பு குடுகுடுவென மேலே ஏறி சீனி வியாபாரியின் தோளின்மீது ஏறி அமர்ந்தது. மூக்குப்பொடி போடுபவர் பொடியை எடுத்து மூக்கில் போட்டார்.

சீனி வியாபாரி தோளில் எறும்பு இருப்பதைப் பார்த்து தட்டிவிட்டார். மூக்குப்பொடி போட்ட வியாபாரி தும்மினார். அந்தக் காற்றில் எறும்பின் உயிர் தப்பியது. இல்லையென்றால் எறும்பு தண்ணீரில் விழுந்திருக்கும். உயிர் தப்பிய எறும்பு மீண்டும் வியாபாரியின் பையில் விழுந்தது.

வியாபாரி சீனி விற்பவர் அல்லவா? தனது கடைக்குச் சென்று சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு, வியாபாரத்தைத் தொடங்கினார். சட்டைப்பையில் இருக்கும் எறும்பு எங்கே போகும்? சீனியைத்தானே தேடிப்போகும்! சீனி சாப்பிட்டவுடன் எறும்பு நன்றாக நித்திரை கொண்டது.

சிறிது நேரம் கழித்து வியாபாரியிடம் ஒரு பெண் சீனி ஒருகிலோ தாருங்கள் என்று கேட்டாள்.

அவசர அவசரமாய்க் கட்டியதில் அந்த எறும்பைக் கவனியாமல் வியாபாரி சீனியைக் கட்டிக்கொடுத்தார். அந்த எறும்புக்கு ஒரே பயமாய்ப் போய்விட்டது. நம் உயிர் அவ்வளவுதான் என்று சோகமாய் நினைத்தது.

ஆனால் அந்தப் பெண் படகில் ஏறி இக்கரைக்கு வந்து சேர்ந்தது. எறும்புக்கோ ஒரே குஷி. ஆகா... நாம் இருந்த இடத்துக்கே வந்து விட்டோம் என்று ஒரே சந்தோஷமாகிவிட்டது. இந்தவிதமாய் தனது ஆசையை நிறைவேற்றிக்கொண்டது. முயன்றால் முடியும். நம்பிக்கை தான் முக்கியம்.

இங்கே மடிக்கவும்



# இன்ஸ்பெக்டர் இளையதம்பி துப்பறியும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

# தொலைந்த வைரம்



அரைமணி நேரம் கழிந்தது. இளையதம்பியும், முத்துவேலுவும் பட்டறையிலிருந்து திரும்பி வந்தார்கள். இளையதம்பியின் முகம் இப்போது மிகவும் பிரகாசமாயிருந்தது.

அதற்கு மாறாக முத்துவேலுவின் முகத்தில் கலவரம் பரவிக் காணப்பட்டது. பரந்த அவரது நெற்றியில் முத்துக்களாக வியர்வைத் துளிகள் அரும்பிக் கிடந்தன.

மிஸ்டர் முத்துவேலு நீங்கள் வியாபாரத்தைத் தொடர்ந்து கவனியுங்கள். மீதி எல்லாவற்றையும் நானே பார்த்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லிய இளையதம்பி கடை வாசலுக்குத் திரும்பி வந்தார். வாசலில் நின்ற குட்டிச் சிறுவனது கையிலிருந்த கொய்யாப்பழத்தைக் காணவில்லை.

**விழுங்க முடியாது துப்பிவிடு**

கொய்யாப் பழத்தைக் கடித்துக் கடித்து அதுமுடியாது அலுத்துப்போனவன் பழத்தை முழுதாகவே வாயில் போட்டு விழுங்கிட முயன்றிருந்தான். அதைப் பற்றி அக்கறை எதுவும் கொள் ளாதவனாய்ச் சிறுவனருகே நின்றிருந்த நாதன் எங்கோ வேடிக்கை பார்த்திருந்தான். நல்லவேளை குட்டிச் சிறுவனிடமிருந்தது பெரியதொரு கொய்யாப்பழம்.

அதுவே சிறியதொரு பழமாயிருந்தால் இந்நேரத்துக்கு அதை வெற்றிகரமாக விழுங்கித் தீர்த்திருப்பான். தொண்டையிலோ அல்லது மூச்சுக்குழாயிலோ அந்தப்பழம் போய் மாட்டிக்கொண்டு அவனது உயிருக்கே பெரியதொரு ஆபத்தைக் கொண்டுவந்து சேர்த்திருக்கும்.

சிறுவனின் அருகில் சென்ற இளையதம்பி அவனது கன்னத்தைத் தனது விரல்களால் மெதுவாக அழுத்திப்பிடித்து வாயைத் திறக்கச் செய்தார். அடேய் குட்டிப்பயலே இனியும் இந்தப் பெரிய கொய்யாப் பழத்தை வாயில் வைத்திருந்து கஷ்டப்படாமல் மரியாதையாகத் துப்பிவிடு என்று சொல்லி சிறுவனின் வாயிலிருந்த கொய்யாப் பழத்தை வெளியே துப்பச் செய்தார். தனக்கு மிகவும் பிடித்திருந்த கொய்யாப் பழத்தை விழுங்கவிடாது சதிசெய்து இளையதம்பி தடுத்ததால் கவலையடைந்து ஓவென்று அழுதுகொண்டே தாயாரிடம் விரைந்து ஓடிச் சென்றான் குட்டிச்சிறுவன்.

**கஷ்டப்படாதே நாதன் துப்பிவிடு**

அழுதுகொண்டே அம்மாவைத் தேடிஓடும் சிறுவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே நாதனருகில் வந்த இளையதம்பி அவனைப் பார்த்து நாதன் அந்தச் சிறுவனைப் போலவே நல்லபையனாக நீயும் நடந்து வாயிலிருக்கும் அந்தப் பச்சை வைரத்தை வெளியே துப்பிவிடப்பா என்று சொன்னார். இளையதம்பி சொன்னதைக் கேட்ட நாதனின் முகம் பயத்தால் பேயறைந்தது போலாயிற்று. எனினும் சமாளித்துக் கொண்டே இன்ஸ்பெக்டர் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்கு எதுவுமே விளங்கவில்லையே என்று சொன்னான்.

நாதனின் கையை இறுகப் பற்றிக்கொண்ட இளையதம்பி வெடிச் சிரிப்பொன்று சிரித்துவிட்டு நடிக்காதே நாதன் எனக்கு எல்லாம் தெரியும். வைரத்தை எடுத்தது நீதான் என்பதும் தெரியும். அதை வாயில் போட்டு மறைத்து வைத்திருக்கிறாய் என்பதும் தெரியும். கொய்யாப் பழத்தைப் போலல்ல வாய்க்குள் நீ ஒழித்து வைத்திருக்கும் வைரம். அதை விழுங்கினால் மரணம் நிச்சயம்.



**விழுங்காதே அபாயம்**

செய்த தவறை மறைப்பதற்காக வைரத்தை நீ விழுங்கினாலுங்கூட இறுதியில் மருத்துவர்கள் உயிரற்ற உனது உடலை அறுத்து வயிற்றிலிருக்கும் அந்த வைரத்தை மீட்டெடுத்து முத்துவேலுவிடம் திருப்பிக் கொடுப்பார்கள். ஆகவே புத்திசாலியாக நடந்து வைரத்தை நீயே திருப்பிக்கொடுத்துவிடு. கூடவே செய்த குற்றத்தையும் ஒப்புக்கொள்வாயானால் உனக்கு கிடைக்கப்போகும் தண்டனையைக் குறைக்குமாறு நீதி மன்றத்துக்கு நானே சிபாரிசும் செய்வேன் என்று சொன்னார் இளையதம்பி.

இளையதம்பி சொன்னதையெல்லாம் அமைதியாகக் கேட்டிருந்த நாதன் விழுந்து விழுந்து சிரித்துவிட்டு வாயிலிருந்த மிட்டாய் ஒன்றை விரைந்து துப்பினான். பாருங்கள் இன்ஸ்பெக்டர் எனது வாயிலிருந்தது பச்சை வைரமல்ல இந்த மிட்டாய் வைரம்தான். இதற்கு மேலும் என்மேல் சந்தேகமானால் இதோ வாயை நன்றாகத் திறந்து காட்டுகிறேன் பரிசோதித்துப் பாருங்கள் என்று கேலியாகச் சொல்லி வாயை அகலத் திறந்து காட்டினான்.

**கெட்டிக்காரன் நாதன்**

வயதில் சிறியவன் ஆனாலும் நல்ல கெட்டிக்காரன் தான் இவன். நான் பேசும் முறையை வைத்தே எனக்குத் தன்மேல் சந்தேகம் தோன்றிவிட்டது என்பதை உணர்ந்து நான் கடைக்குள் போய் வருவதற்குள் வாயினுள் மறைத்து வைத்திருந்த வைரத்தை எடுத்து சாதுரியமாக வேறு எங்கோ மறைத்து வைத்துவிட்டான்.

என்னை ஏமாளியாக்கிட குட்டிச் சிறுவனின் சட்டைப் பையிலிருந்து மிட்டாய் ஒன்றையும் எடுத்து வாயில் போட்டுக்கொண்டு அதுதான் இவ்வளவு நேரமாகத் தனது வாயிலிருந்ததாகக் காட்டி நாடகமாடுகிறான். இவனோடு நல்ல முறையில் மரியாதையாகப் பேசி உண்மையை வரவழைப்பது மிகவும் கஷ்டம். பொலிஸ் குணத்தைத்தான் காட்ட வேண்டும் என்று முடிவு செய்தார் இளையதம்பி.

**வந்தான் வழிக்கு**

நாதனின் கைகளை முறுக்கிப் பின்புறமாக மடக்கி கைவிலங்கை மாட்டினார் இளையதம்பி. ஐயோ தேவையில்லாது நிரபராதியான என்னைக் கொடுமைப்படுத்துகிறாரே இந்தப் பொலிஸ்காரர் என்று உரத்து ஓலம் எழுப்பினான் நாதன். அவனது கன்னத்தில் பளாரென்று ஒரு அறை கொடுத்து வாயை மூடடா திருட்டுப்பயலே! செய்வதையும் செய்துவிட்டு. இப்போது ஏதும் அறியாத நல்ல பிள்ளை போலவா நாடகமாடுகிறாய் நீ? பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுபோய் உனது முதுகுத் தோலை உரித்து உண்மையை நான் வரவழைக்கிறேன் பார் என்று உறுமினார் இளையதம்பி.

(தொடரும்...)

# எத்தனை பறவைகள் உள்ளன?



செவ்வக வடிவமுள்ள ஒரு கல் 8 துண்டுகளாக உடைந்துவிட்டது. இவற்றுள் 6 துண்டுகள் மட்டும் கீழே கிடக்கின்றன. மீதி 2 துண்டுகளைக் காணவில்லை. அவை எந்தெந்தத் துண்டுகள் என்று கூறுங்கள்?




## எத்தனை கிளிகள்



வானில் கிளிகள் பறந்து சென்றன. அதில் ஒரு கிளி சொன்னது, என் பின்னால் 5 கிளிகள் வருகின்றன என்று. மற்றொரு கிளி சொன்னது என் பின்னாலும் 5 கிளிகள் வருகின்றன என்று. இதேபோல் பறந்துசென்ற ஒவ்வொரு கிளியும் சொன்னது ஏன்?

## மூளைக்கு வேலை



1. தனது நண்பரொருவரின் பண்ணைக்கு கோபி சென்றார். நண்பர் தனது பண்ணையில் வேலைசெய்து கொண்டிருந்தார். பண்ணையில் ஆடுகளும், கோழிகளும் நின்றன. இங்கு எத்தனை ஆடுகள், எத்தனை கோழிகள் நிற்கின்றன? என்று கோபி தனது நண்பரைக் கேட்டார்.

நண்பர் சொன்னார் - ஆடுகள் கோழிகளின் தலையை எண்ணினால் 80 தலைகள் உள்ளன. இவற்றின் கால்களை எண்ணினால் மொத்தமாக 192 கால்கள் உள்ளன. எத்தனை ஆடுகள் எத்தனை கோழிகள் உள்ளன என்று நீங்களே கண்டுபிடியுங்கள் - என்றார்.

கோபிக்கு நீங்கள் உதவிசெய்யுங்கள். பண்ணையில் எத்தனை கோழிகள் எத்தனை ஆடுகள் உள்ளன?

**2. பத்து தென்னங்கன்றுகள் உங்களிடம் தரப்படுகிறது. இவற்றை ஐந்து வரிசையில் நடவேண்டும். ஆனால் ஒவ்வொரு வரிசையிலும் நான்கு தென்னங் கன்றுகளே இருக்கவேண்டும். எங்கே படம்போட்டு முயற்சியுங்கள் பார்க்கலாம்?**

## மூளைக்கு வேலை
## சென்றவார விடைகள்

1. மூன்று இலைகளையும் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி நுனியில் முதல் வெட்டை வெட்டவேண்டும். மூன்று துண்டுகள் கிடைக்கும். பின்னர் அடியில் உள்ள துண்டுகளை நீளப்பாட்டில் இரண்டாக வெட்டவேண்டும். 6 துண்டுகள் கிடைக்கும். இவற்றை ஒன்றாக அடுக்கி மூன்றாவது வெட்டை வெட்டினால், 12 துண்டுகள் கிடைக்கும். முதல் வெட்டிய 3 துண்டுகளுடன் இப்போது 15 துண்டுகள்.

2. 8+14+20+26+32 = 100

இங்கே மடிக்கவும்





ஜோன்:- பள்ளிக் கூடத்தில் எவராலையும் செய்ய முடியாததை என்னால் செய்ய முடியும். என்னுடைய வகுப்பாசிரியரால் கூட முடியாது.

ஹரி:-என்ன அது?

ஜோன்:- என்னுடைய கையெழுத்தை வாசிப்பது.

ராஜு:- சுரேஸ், உன்ட அப்பா ஒரு ஆசிரியர். ஆனா, உன்ட மூத்த அக்காவுக்கு எழுதத் தெரியாது.

சுரேஸ்:-அதுக்கென்ன? உன்ட அப்பா ஒரு பல்வைத்தியர். ஆனா, உன்ட குட்டித்தம்பிக்கு பல் இல்லையே.



## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :....................................
கற்கும் பாடசாலை :....................................
கற்கும் தரம் :....................................
வீட்டு முகவரி :....................................
பிறந்த திகதி :....................................
ஆர்வமுள்ள துறைகள் :....................................
:....................................

..................
திகதி

..................
ஒப்பம்

..................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம்

..................
பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் : மு.பிரியங்கா
பாடசாலை : சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
தரம் : 01
ஆர்வமுள்ள துறைகள் : புத்தகம் வாசித்தல், நடனம், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர் : ம.நிமல்
பாடசாலை : மிருசுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.
தரம் : 02
ஆர்வமுள்ள துறைகள் : புத்தகம் வாசித்தல், விளையாட்டு, படிப்பு.



பெயர் : ந. தனுசன்
பாடசாலை: கலட்டி றோமன் கத்தோலிக்க அரசினர் பாடசாலை.
தரம் : 05
ஆர்வமுள்ள துறைகள் : புத்தகம் வாசித்தல், விளையாட்டு.

பெயர் : அ.அச்சுதன்
பாடசாலை : செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.
தரம் : 02
ஆர்வமுள்ள துறைகள் : பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல், விளையாட்டு.

பெயர் : மு. மதுமிதா
பாடசாலை : பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.
தரம் : 10
ஆர்வமுள்ள துறைகள் : பத்திரிகை வாசித்தல், தொலைக் காட்சி பார்த்தல்.

பெயர் : சி.அனுப்பிரியா
பாடசாலை : கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
தரம் : 09
ஆர்வமுள்ள துறைகள் : வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல் , தொலைக்காட்சி பார்த்தல்

பெயர் : யோ. பாஸ்கரன் சித்தார்த்தன்
பாடசாலை : சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
தரம் : 09
ஆர்வமுள்ள துறைகள் : பத்திரிகை வாசித்தல், தொலைக் காட்சி பார்த்தல், விளையாட்டு, முத்திரை சேகரித்தல்.

# காட்டு விலங்குகளின் ராஜா யார்?

அந்தச் சிங்கத்தைப் பொறுத்தவரையில் காட்டுராஜாவாகப் பொறுப்பேற்ற பிறகு, மற்ற மிருகங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லைதான். ஆனாலும் ஒரு நல்ல தலைவர் கிடைத்தால், அவரது வளர்ச்சியைப் பொறுக்காத மற்றவர்கள் கிளர்ச்சி செய்வதுதானே வழக்கம்.

அப்படித்தான் காட்டில் இருந்த அந்த யானையும் செய்தது. சிங்கத்திற்குக் காட்டுப் பொறுப்பு பெரிய சுமையாகத் தெரிந்ததால், உதவித் தலைவராக யானை ஒன்றை நியமித்தது. மற்ற மிருகங்களுக்கிடையே நடக்கும் சின்னச் சின்னப் பிரச்சினைகளை யானையே சரி செய்துவிட வேண்டும்.

இந்தப் பொறுப்புக் கிடைத்தபிறகு யானையால் சும்மா இருக்கமுடியவில்லை. தன்னைப் பெரிய தலைவராக நினைத்துக்கொண்டது.

ஆரம்பத்தில் மற் றைய மிருகங்களும் தலைமைப் பொறுப் பில் இதுமாதிரியான நிகழ்வுகள் சகஜம் என் பதாக எடுத்துக் கொண் டன. யானை தீர்த்து வைக்கும் எந்தப் பிரச் சினை பற்றிய பின் னணியும் சிங்கத்தின் காதுக்குப்போகாது என் பதால், யானை தனது தீர்ப்பில் அலட்சியமாக இருந்தது.

இதற்கிடையே காட்டுக்குள் இதுவரை தலைமைப் பொறுப்புக்கு வரு பவர்களுக்காகத் தேர்தல் எதுவும் நடந்ததில்லை. வலுவும், மனோதிடமும், தைரியமும் நிறைந்தது என்ற அளவில் காலம் காலமாகச் சிங்கங்களே, காட்டு ராஜாக்களாகத் தொடர்ந்து பொறுப்பேற்றன.

ஆனால் அதுவரை துணைத் தலைவர் என்ற பொறுப்பு எவருக்கும் வழங்கப்பட்டதில்லை. இப்போது முதன் முதலாக இந்தத் தலைவர் சிங்கம் உதவித் தலைவராக யானையை நியமித்தபிறகேதான் நிலைமை தலைகீழானது.



அதற்கும் வழிவகுத்துக் கொடுத்தது யானைதான். தன்னைச் சந்திக்க வரும் மற்ற விலங்குகளிடம் தனது சாதனைகளாகப் பல பெருமைகளை அள்ளி விட்டது. இப்படித்தான் ஒரு முறை, அங்கிருந்த பனைமரம் ஒன்றைத் தனது துதிக்கையால் பிடுங்கி வீசியது.

அதோடு நின்றிருந்தால் பரவாயில்லை. தலைவர் தலைவர் என்றீர்களே... உங்கள் தலைவர் சிங்கத்தால் என்மாதிரி இப்படியொரு மரத்தைப் பிடுங்கி வீசமுடியுமா? என்று கேட்டது.

பத்து மிருகங்களிடம் இப்படிக் கேட்டால் இரண்டு மிருகங்களாவது இதுபற்றி யோசனை பண்ணத்தானே செய்யும். நாளாக ஆக இந்த இரண்டு என்ற எண்ணிக்கை இருபது, ஐம்பது, நூறு என்று பெருகிற்று.

சந்தேக விதையை விதைத்தது, இத்தனை சீக்கிரம் மரமாகும் என்று யானைகூட எதிர்பார்க்கவில்லை. எங்களின் புதிய தலைவர் நீங்கள்தான் என்று அப்போதே அனைத்து மிருகங்களும் உறுதிமொழி கொடுக்கத் தொடங்கின.

அந்தக் காட்டு நிர்வாக சட்ட திட்டத்தின்படி ஒரு தலைவரின் பதவி மூன்றாண்டுகாலம், இப்போது இந்த மூன்றாண்டுகாலம் முடிகிற வேளை வந்தபடியால், புதிய தலைவராக யார் வருவார் என்ற எதிர்பார்ப்பு மிருகங்களிடையே இருந்தது. அதோடு ஒரு தடவை தலைவராக இருந்தவர் மறு முறை தலைவராக முடியாது. இப்படியிருந்தும், ஒவ்வொரு மூன்றாண்டுக்குப் பிறகும் ஏதாவது ஒரு சிங்கம்தான் தனது வலிமையால் தலைவராகிக் கொண்டிருந்தது. பதவிக் காலம் முடிந்த நிலையில் நடக்கும் பிரிவு உபசார விழாவில், தலைவர் சிங்கமே புதிய தலைவரை மேடையில் அறிவித்து விடும். இந்தமுறை இந்தச் சுயவிருப்பம்

நிராகரிக்கப்படவேண்டும் என்பதில் யானை கவனமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் சிங்கம்தான் தலைவர் என்ற முடிவு மாற்றப்பட்டு, துணைத்தலை வரே தலைவராக வேண்டும் என்று புதிய சட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என்பது யானையின் எதிர்பார்ப்பாக இருந்தது.

இதனால் தனது விருப்பத்தைப் பொது யோசனையாக மற்றைய மிருகங்களிடம் திணித்தது யானை. யார் தலைவர் என்பதைத் தேர்தல் மூலம் முடிவு செய்துவிடு வோம் என்றும் சொன் னது. தேர்தல் என்றால் எந்தமாதிரி என்றும் விளக்கியது. துணைத் தலைவராக இருந்து வரும் என்னை உங்கள் ஒருமித்த குரல்கள் மூலம் தலைவ ராக நியமிக்கக் கேட்டுக் கொள்ளவேண்டும்.



இப்படி ஒருமித்த குரலில் எல்லோரும் சொல்ல முன்வந்தால், புதிய தலைவராகும் ஆசை மனசுக்குள் இருந்தாலும் எந்தச் சிங்கமும் வாய் திறந்து சொல லாது என்று எண்ணிக் கொண்டது.

தலைவர் சிங்கத்தின் காதுக்கு இந்த விஷயம் போனது. புதிய தலைவராகத் துடிக்கும் யானையின் எண்ணத்தை தலைவர் சிங்கத்தைத் தனியாகச் சந்தித்த ஒரு குரங்கு சொல்லிவிட்டது.

மறுநாளே விலங்குகளைக் கூட்டியது தலைவர் சிங்கம். என்னவோ ஏதோ என்று விழுந்தடித்து ஓடி வந்த மிருகங்களிடம், புதிய தலைவர் பதவிக்குத் தேர்தல்வைக்க விரும்புகிறீர்களா? என்று கேட்டது சிங்கம்.

ஏன் தேர்தல் நடத்தினால்தான் என்ன? காலம் மாறுது. நாமும் மாறினால் என்ன? என்றது கூட்டத்தில் இருந்த ஒட்டகச்சிவிங்கி ஒன்று. அது அப்படிச் சொல்லக் காரணம், முந்தின நாள்தான் அதன் இரைக்கு ஒரு பெரிய மரத்தின் கிளையை ஒடித்துக் கொடுத்திருந்தது யானை. இதையே மற்றைய காட்டு விலங்குகளும் ஆமோதித்தன.

தேர்தல்நாள் நெருங்க, காட்டுக்குள்ளே திருவிழா தான். மைக் வைத்துத் துணைத்தலைவராக இருந்தபோது சில சாதனைகளை அடுக் கிய யானை, தலைவ ராகத்தேர்ந்தெடுத் தால் என்னென்னசெய்வேன் என்றும் அடுக்கியது.

தேர்தல்நாளும் வந்தது. எல்லா மிரு கங்களும் கூடியி ருந்த நேரத்தில் அந் தச் சம்பவம் நடந்தது. எங்கிருந்தோ பயங் கர கர்ஜனையுடன் வந்த ஒரு சிங்கம் விலங்குகள் கூட்டுக்குள் ஆவேசமாகப் புகுந்தது. இதற்குப் பிறகு மற்றைய விலங்குகள் நிற்குமா? உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, பிடித்தன ஓட்டம். புதிய சிங்கம் இப்போது சுற்றுமுற்றும் பார்த்தது. தலைவர் சிங்கம் மட்டுமே அங்கிருக்க, யானையும் எப்போதோ ஓட்டம் பிடித்திருந்தது.

புதிய சிங்கம் இப்போது தலைவர் சிங்கத்திடம், ஹ... ஹ... நான் பக்கத்துக் காட்டுத் தலைவர். உங்கள் காட்டில் புதிய தேர்தல்முறை என்பதாக ஒரு சேதி என் காதுக்கு வந்தது. வெறும் உடல் பலத்தைமட்டும் கருத்தில் வைத்து ஒரு யானையைத் தலைவராக்க எப்படி ஒப்புக் கொண்டன உங்கள் விலங்குகள்? உடல் பலமும் அவசியம், மனோபலமும் அவசியம். முடிவெடுப்பதில் சாமர்த்தியம், திட்டங்கள் தீட்டுவதில் தெளிவான சிந்தனை இதெல்லாம் தலைவருக்குத் தகுதியானவை அல்லவா?... தலைவர் என்பவர் தனது பொறுப்பில் உள்ளோரைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டவர். கூட்டத்தோடு கூட்டமாக ஓட அல்ல. புதிய தலைவர் விடயத்தில் இப்போதாவது தெளிவாக இருங்கள். வருகிறேன்... என்று சொல்லிப்போனது. அதன்பிறகு அந்தக் காட்டில் புதிய தலைவர் என்ற பேச்சே எழவில்லை. உதவித் தலைவராக யானை உட்பட எந்த மிருகமும் பொறுப்பேற்கவும் இல்லை. பழைய சிங்கம்தான் இப்போதும் தலைவராக நீடித்துக் கொண்டிருந்தது.

இங்கே மடிக்கவும்



# அண்ணனும் தங்கையும்



நட்சத்திரங்களின் வண்ணங்கள் ஏன் வெவ்வேறானவை?

இரவுணவை முடித்துக் கொண்ட சங்கர் அண்ணா வெளி முற்றத்துக்கு வந்தார். சிறிதுநேரம் உலாத்தினார். வானத்தை அண்ணாந்து பார்த்தார். நிறைய நட்சத்திரங்கள் ஒவ்வொரு வண்ணத்தில் பிரகாசித்தவாறு இருந்தன. குழலியை அழைத்தார். அப்பொழுதுதான் இரவுணவை முடித்துவிட்டு, கைகழுவிக்கொண்டிருந்தாள் குழலி.

குழலி : ஓம் அண்ணா இதோ வாரன்.

(குழலி முற்றத்துக்கு ஓடி வந்தாள்)

சங்கர் : சாப்பிட்டு விட்டாயா குழலி?

குழலி : இப்பதான் சாப்பிட்டு முடித்தேன். ஏன் அண்ணா கூப்பிட்டனீங்கள்?

சங்கர் : வானத்தை அண்ணாந்து பார்.

குழலி : ஆ!.... எவ்வளவு நட்சத்திரங்கள்.

சங்கர் : இன்று நிறைய நட்சத்திரங்கள் வானத்தில் தெரிகிறது. ஆனால் அவற்றின் வண்ணங்கள் ஒரே மாதிரி இல்லையே. அதைக் கவனித்தாயா குழலி?

குழலி : இப்போதுதான் அதைக் கவனித்தேன். ஏன் வண்ணங்கள் வெவ்வேறாக இருக்கிறது?

சங்கர் : பட்டறையில் இரும்பு சூடாக்குவதைப் பார்த்திருப்பாய். சூடாகிக் கொண்டே போகப்போக இளஞ்சிவப்பு, சிவப்பு, மஞ்சள், நீலம், வெள்ளை என்று அதன் நிறம் மாறிக்கொண்டிருக்கும். அது போலத்தான் ஒளிரும் வெப்பநிலையைப் பொறுத்து நட்சத்திரங்களின் நிறமும் வேறுபடுகிறது.

குழலி : எந்த வெப்பநிலையில் எந்த நிறம் தெரியும் அண்ணா?

சங்கர் : நல்ல கேள்வி குழலி. சிவப்புநிற நட்சத்திரங்களின் புறவெப்பநிலை 4000 பாகை செல்சியஸ்க்கும் குறைவாகவும். மஞ்சள்நிற நட்சத்திரங்களின் வெப்பநிலை 6000 தொடங்கி 10000 பாகை செல்சியஸ் வரையிலும், நீல ஒளியுடன் பிரகாசிக்கும் நட்சத்திரங்களின் வெப்பநிலை 20000 பாகை செல்சியஸ்க்கும் மேலாகவும் இருக்கும்.

குழலி : அண்ணா! வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன.

சங்கர் : இந்தக் கேள்வியைக் கேட்காதவர்களும் இல்லை. இருந்தாலும் அவுஸ்ரேலிய வானவியல் அறிஞரான டாக்டர் ஸைமன் டேவிட் இதற்கு முயற்சித்திருக்கிறார். கிட்டத்தட்ட 70 செக்ஸ்ரில்லியன் எண்ணிக்கை வரையில் இருக்குமாம். அதாவது 7 எழுதி அதன் ருகே 22 சைபர்கள் எழுதவேண்டும்.

குழலி : அடேயப்பா! எனக்குத் தலையைச் சுத்துகிறது.

# நாம் வாழும் உலகம்



ஓர் ஒளிக்கதிரை ஓர் அரியத்தினூடாகச் செலுத்தினால் அவ்வொளியானது வானவில்லில் தோன்றும் பல நிறங்களாகப் பிரியுமென்று ஐசாக் நியூட்டன் தனது ஆராய்ச்சியின் மூலம் காண்பித்தார். அதன்பின் இந்த நிறமாலையைப் பற்றி விஞ்ஞானிகள் பல ஆராய்ச்சிகள் செய்தனர். சோடியம், மக்னீசியம் கல்சியம் அமோனியா போன்ற இரசாயனப் பொருட்களுக்கும் இந்த நிற மாலைக்கும் தொடர்பு இருப்பதை அறிந்தனர். இதன் விளைவாக மற்றைய கிரகங்கள் நட்சத்திரங்கள் முதலியவற்றிலிருந்து வரும் ஒளியின் தன்மையிலிருந்து அங்கங்கே என்னென்ன இரசாயனப் பொருட்கள் இருக்கின்றனவென்றும் ஊகித்தறிந்தனர்.



இவ்வாறு தொலைநோக்கிக்குப் பின்னர் நிறமாலையானது விண்ணியற்கலை வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்தது. அடுத்ததாகப் புகைப்படக் கருவி கண்டுபிடிக்கப்பட்டபின் இக்கலை மேலும் வளர்ச்சியடைந்து. புகைப்படக் கருவியைத் தொலைநோக்கியுடன் இணைந்து அதனுதவியால் கண்ணுக்கெட்டாத தூரத்தினுள் புகுந்து பல அரிய உடுத்தொகுதிகளைக் கண்டுபிடித்தனர்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா*
*மெலியார்மேல் மேக பகை.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## ஜே.வி.பியினரின் அர்த்தமற்ற நியாயப்படுத்தல்கள்....!

சமாதானப் பேச்சுக்களை தொடர்வதற்கு எந்த நேரத்திலும் தயாராகவே இருக்கிறோம். ஆனால், விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் அதனை மேற்கொள்ளத் தயாராக இல்லை.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்த கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் அக்கியோ சூடா, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியான நெதர்லாந்துத் தூதுவர் திருமதி கசான் பிலான்கார்ட் மற்றும் அமெரிக்க தூதுவர் ஜெவ்றிலன்ஸ்ரீட் ஆகியோர் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக்கட்சியான மக்கள் விடுதலைமுன்னணியின் - ஜே.வி.பி யின் - நிலைப்பாடு குறித்தும் நோர்வேயின் சமாதான அனுசரணையாளர் பணியை நிராகரித்து அவமதிப்பது குறித்தும் கடும் அதிருப்பதியைத் தெரிவித்ததுடன், கூட்டறிக்கையொன்றை வெளியிட்டதும் தெரிந்ததே.

அந்தக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த காட்டமான வார்த்தைகளுக்கு பதிலளிக்கும் - தம்நிலை விளக்கக் கடித அறிக்கை யொன்றிலேயே ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மேற்குறிப்பிடப்பட்டுள்ள கருத்தை முன்வைத்துள்ளார்.

ஜே.வி.பியினரின் அந்த பதில் கடிதத்தில் சர்வதேச சமூகத்தை சமாளிக்கும் தன்மைகொண்டதுடன், பொய்யானதும், ஏற்றுக்கொள்ளமுடியாததுமான நியாயப்படுத்தல்களைக் கொண்டதுமாகும்.

சமாதான முயற்சிகளுக்கு தமது கட்சி முட்டுக்கட்டையாக இருப்பதாக குற்றம் சாட்டுவது தவறு என்று தெரிவிக்கும் ரில்வின் சில்வா, அப்படியான குற்றச்சாட்டு தமக்கு அதிர்ச்சியை அளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளதுடன், சுதந்திர முன்னணிக்குள் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று மக்கள் ஆதரவைப் பெற்ற கட்சியும் தாங்கள் தான் என்பதை இறுக்கமாகக் குறிப்பிடுவதன் மூலம், அரசாங்கத்தில் தமது பலத்தினை வலியுறுத்தவும் முயன்றுள்ளார்.

இந்த மக்கள் ஆதரவுப் பலம் அரசாங்கத்தின் சார்பில் கருத்தை வெளியிடும் தமது உரிமையை தமக்கு அளித்துள்ளதாக உணர்த்தத் துடிக்கும் ஜே.வி.பியினரின் நிலைப்பாட்டை கோடிகாட்டுவதற்காக வலியுறுத்தப்பட்டதாகவும் கூறமுடியும்.

ஆனால், சர்வதேச சமூகமும், கூட்டறிக்கையை வெளியிட்டுள்ள நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் அவ் அறிக்கையில் கையொப்பமிடாத சமாதான அனுசரணையாளர்களான நோர்வேயும் கடந்த சில ஆண்டு காலமாக குறிப்பாக சமாதான நகர்வுகள் மற்றும் பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் ஆரம்பமான காலம் முதலே ஜே.வி.பி யினர் அதற்கு எதிரான செயற்பாடுகளைத் துல்லியமாக மதிப்பீடு செய்தே வந்துள்ளனர் எனலாம்.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியையும் மிகவும் ஆத்திரத்துடனும், எதிர்ப்புணர்வுடனுமே ஜே.வி.பியினரும் ஏனைய பேரினவாதக் கட்சியினரும் அணுகி வந்துள்ளமை அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். இந்தப் பேரினவாத அணியினருக்கு ஜனாதிபதியே மறைமுகமாக தலைமை வகித்தார் என்பதையும் மறுக்கமுடியாது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை கலைக்கவும், சமாதான நகர்வுகளை குழப்பவுமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டணியை அமைக்க தனது கணவரைக் கொன்ற கொலையாளிகளுடன் உடன்பாடு காணத் துணிந்தவர் ஜனாதிபதி என்பதும் உண்மையே.

அதேபோல், ஜே.வி.பியினரும் சமாதான எதிர்ப்பு நோக்குடனும், வேறுபல அரசியல் நோக்கங்களுடனும் ஜனாதிபதியுடன் கூட்டணி அமைக்க முனைப்புடன் செயற்படுவதற்கு முன்னரேயே தமது சமதர்ம பொதுவுடமை புரட்சிக்காரர்கள் வேஷத்தைக் கலைத்து விட்டு பேரினவாதக் கோஷத்தைப் போட ஆரம்பித்ததுடன் சமாதான நகர்வுகளுக்கு அனுசரணையாளராக பணிசெய்ய முன்வந்தநோர்வேக்கு எதிராக போராடவும் செய்தனர் என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

இதே ஜனாதிபதிதான் சொல்ஹெய்ம் பணியைக் குறை கூறி அவரை சமாதானப் பணியினின்றும் விலக்கிக் கொள்ளுமாறு நோர்வே அரசுக்கு கடிதமெழுதியவருமாவார்.

இரு சமாதான எதிர்ப்புக் கொள்கையாளரும் இணைந்து உருவாக்கிய அரசு சமாதான முயற்சிகளின் நம்பிக்கையுடன்-விசுவாசத்துடன் இயங்குவதாகக் கூறுவது வெறும் பம்மாத்துதனமேயாகும்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளை - அதுவும் ஒரு தற்காலிக அமைப்புக்கான தேவையை தமிழீழத்திற்கான முன்வரைபு எனக்கூறி ஜே.வி.பியினர் நிராகரிப்பதைக் கவனத்தில்கொண்டு பார்த்தால் இடைக்கால அமைப்பையே நிராகரிக்கும் இவர்களால், இறுதித் தீர்வுக்கான ஒரு நிரந்தரமான அமைப்புக் குறித்து ஒரு துளிதானும் பரிசீலிக்க முடியுமா என்பது நிரந்தரமான கேள்வியேயாகும்.

தமது மக்களின் கௌரவமான - சுதந்திரமான வாழ்வுக்கான உரிமைகளை வென்றெடுக்க அர்ப்பணிப்புடன் போராடி வரும் விடுதலைப் புலிகளை பாசிச சர்வாதிகாரிகள் என வர்ணிக்கும் ஜே.வி.யினரின் கடந்த போராட்ட வரலாறுகள் அனைத்தும் அவர்கள் எத்தகைய கொடிய தன்மைகொண்ட தங்கள் சொந்த இனத்தவரையே மிருகத்தனமாகக் கொன்றழித்த ஈவிரக்கமற்ற மனித உரிமை மீறல் செயற்பாட்டாளர்கள் என்பதை இரத்த வரிகளால் பதிவுசெய்தே வைத்துள்ளது என்பதை சர்வதேச சமூகம் அறிந்தேயுள்ளது. இதனை உணராது ஜே.வி.யினர் தம்மை நியாயப்படுத்த முயல்வது பரிதாபகரமான - பரிகாசத்துக்குரிய முயற்சியேயாகும்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# இராணுவப் பாதுகாப்பு அணைகள் காரணமாக கரைபுரண்டு நாசம் செய்யும் மழை வெள்ளம்



சமஷ்டிக் கோரிக்கையை வைத்து தமிழரசுக் கட்சியினர் நாட்டைப் பிரிக்கப் பார்க்கிறார்கள் என்று, சிங்கள மேலாண்மை வாதிகள் 1950 களிலிருந்து கூச்சலிட்டார்கள்.

சந்திரிகா அம்மையாரின் தகப்பன் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா இங்கிலாந்தில் உயர் படிப்புப் படித்து விட்டு நாடு திரும்பியதும், இலங்கைபோன்ற நாடுகளுக்குச் சமஷ்டி அமைப்புமுறையே பொருத்தம் என்று சொன்னார்.

ஆனால், டி.எஸ்.சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும்வரை தமக்கு ஆட்சிக் கதிரையில் இருக்கும் வாய்ப்புக் கிடைக்காது என்று உணர்ந்ததும், ஒற்றையாட்சி முறையை இறுக்கிப் பிடித்தார்.

ஆனாலும் ஆட்சிபீடத்துக்கு வருவதற்குச் சிங்களத்தை அரியணையில் ஏற்றும் வாக்குறுதியில் மொழி வெறியைக் கிளப்புவதைத்தவிர வேறு வழியில்லை என்று முன்வந்தார்.

சிங்களத்தை இருபத்திநான்கு மணிநேரத்தில் அரச மொழியாக்குவதாக உறுதியளித்தபோது, சமஷ்டி ஆட்சியை ஏற்கமுடியுமா? எனவே சமஷ்டி அமைப்புக் கோரிக்கையை ஏற்றால் நாடு இரண்டாகப் பிளவுபடும் என்று பண்டாரநாயக்காவே கூறினார்.

சமஷ்டி ஆட்சியமைப்பு என்றால் நாடு துண்டாடப்பட்டுவிடும் என்று நீலமும் கூச்சலிட்டது. பச்சையும் கூச்சலிட்டது.

காந்தீய வழியில் தந்தை செல்வா தலைமையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சிங்களம் மட்டும் அரச மொழியாவதை எதிர்த்தும், தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் சம உரிமையுடன் வாழ சமஷ்டி ஆட்சி வேண்டுமென்றும் கோரி சாத்வீகப் போராட்டங்களை நடத்தினர். 1957 ஆம் ஆண்டில் பெரும் போராட்டத்துக்குத் திட்டமிட்டனர். ஆட்சியில் நிம்மதியாக இருக்கமுடியாது என்பதை உணர்ந்த பண்டாரநாயக்க செல்வநாயகத்துடன் பேச்சு நடத்தினார். ஒப்பந்தமும் செய்தார்.

சமஷ்டி என்ற வார்த்தை இல்லாமல் அதிகாரப்பகிர்வு என்ற பெயரில் வடக்கு - கிழக்கில் பிரதேசசபைகள் அமைக்க பண்டாவும் - செல்வாவும் ஒப்புக் கொண்டனர்.

பிரதேசசபைகளும் நாட்டைத் துண்டாடும் செயலே என்று மேலாண்மை வாதிகள் குரல் எழுப்பினர்.

அரசியலில் பண்டா அரையில் ஒதுங்கிக் கிடந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பண்டா - செல்வாவின் பிரதேச சபைகளுக்கு எதிராகக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

பின்னர் 1965 ஆம் ஆண்டில் டட்லி - செல்வா இரகசிய ஒப்பந்தம். பிரதேசசபை என்றாலே வெறுப்பேற்படுமென்று மாவட்ட சபைகள் என்று மாற்றம் பெற்றது.

மாவட்டச் சபைகளும் நாட்டைப் பிரிக்கும் என்று இம்முறை இடதுசாரிகளும் குரல் கொடுத்தனர்.

ஜனநாயக முறையிலும், சாத்வீகப் போராட்டத்தினாலும் தமிழ்த் தலைவர்களும், தமிழ் மக்களும் தமது சுயநிர்ணய உரிமைகளைப் பெற்று, தமது மக்களையும், மண்ணையும் காப்பாற்ற எடுத்த முயற்சிகள் யாவும் ஆயுத பலத்தினாலும், பெரும்பான்மை ஜனநாயக பலத்தினாலும் அடக்கி ஒடுக்கப்பட்டன.

இதன்பின் தமிழ் இளைஞர்கள் செயல்வீரன் பிரபாகரன் தலைமையில் ஆயுதம் ஏந்திப் போராடி, தமிழ் மக்களையும் அவர்கள் தாயகத்தையும் பாதுகாப்பதில் உறுதியுடன் முனைந்தனர்.

தமிழர் தாயத்தில் பெரும்பகுதி இப்பொழுது பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதற்கு உலக நாடுகளின் அங்கீகாரம்தான் இன்று தேவை.

இந்த நடைமுறைக்குத்தான் இப்பொழுது இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோருகின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைக்கவும் இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபையின் அவசியத்தை உலக நாடுகள் பலவும் உணர்ந்துள்ளன.

இந்த இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபையும் நாட்டைப் பிளவுபடுத்தித் துண்டாடிவிடுமென்று சிங்கள மேலாண்மை வாதிகள் மட்டுமல்ல, இந்தியாவின் நலனுக்கூடாக இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதிக்கும் இந்திய அறிவு ஜீவிகளும் குரல் எழுப்புகிறார்கள்.

கையாலாகாத தமிழ்த் தலைவர்கள் என்று பட்டம் கட்டிக் கொண்டிருக்கும் நம்மவர் சிலரும்கூட 'தன்னாட்சி அதிகார சபை' கேட்கக்கூடாத விடயம் என்று புத்தி சொல்லுகிறார்கள்.

எதற்கெடுத்தாலும் நாடு பிளவுபட்டுவிடும், நாடு துண்டாகிவிடும் என்று கூச்சல் போடுகிறவர்கள் - இன்று நாட்டில் பெருகியுள்ள வெள்ளம் நாட்டைத் துண்டாடிக் கொண்டிருப்பதை அறியவில்லையா?

1956 ஆம் ஆண்டுக்குப் பின் நாடாளுமன்றத்திலும், வெளியேயும் பண்டாரநாயக்காவுக்கு எதிராகவும், அவரது அரசுக்கு எதிராகவும் ஓங்கிக் குரல் கொடுத்த தலைவர்களில் அடங்காத தமிழன் சுந்தரலிங்கம் முக்கியமானவர்.

இப்போது போன்று 1957 ஆம் ஆண்டிலும் நாட்டின் வடக்கு - கிழக்கு உட்படப் பல பகுதிகளில் பெரு வெள்ளம் ஏறபட்டது. பெரும் அழிவு ஏற்பட்டது. மக்கள் பாதிக்கப்பட்டனர்.

பிரதமர் பண்டாரநாயக்க வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானத்தில் சென்று பார்வையிட்டார். தமிழ்ப் பகுதிகளுக்கும் சென்றார். வவுனியாவுக்கும் பண்டாரநாயக்க வந்தார். சுந்தரலிங்கமும் சென்று அவரை வரவேற்று, நிலைமைகளை எடுத்துக் கூறினார்.

இப்பொழுது வடக்கு - கிழக்கு பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பகுதிகளில்தான் உயிர்ச்சேதம் அதிகம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பொருட்சேதம், பயிர்ச்சேதம் அதிகம் ஏற்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எத்தனை அமைச்சர்கள் நேரில் போய்ப் பார்த்திருக்கிறார்கள்.

வடக்கிலும், கிழக்கிலும், வீதிகளிலும், வீடுகளிலும் வெள்ளம் கரை புரண்டோடுவதற்குப் படைத் தரப்பினர் தமது பாதுகாப்புக்குப் போட்ட அரண்களே காரணம் என்பதை அதிகாரிகள் அரசுக்கு அறிவித்துள்ளார்களா?

வன்னிப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்துகொண்டிருப்பவர்கள் யார்? தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏதோ செய்து கொண்டிருக்கிறது.

நாடு பிளவுபட்டுவிட்டது. தமிழர் தாயகத்தை அரசு கைகழுவி விட்டு விட்டதா?

# இவ்வார பலன்கள்

## 17-12-2004 23-12-2004

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| சந் யுரே | 18 மா. 04-57 மீன-சந் 20 இ. 12-16 மேட-சந் 23 பக. 10-31 இட-சந் | | சனி |
| நெப் | | | |
| சூ | செவ்,சுக் புத | கேது | குரு |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படும். புத்திரர்களால் உதவி கிடைப்பது கடினம். உறவினர்களிடையே சச்சரவுகள் தோன்றும். தொடங்கும் கருமங்களில் அலைச்சல், தடை, தாமதம் காட்டும். தேகசுகத்தையும் பேணிக்கொள்ள வேண்டும். எல்லாக் கருமங்களுக்கும் பொறுமை தேவை. விவாகப் பேச்சுக்கள் காலதாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிக வேலைப் பொறுப்புக்கள், கெடுபிடிகள் தோன்றும் வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும். வருமானம் போதாமலிருக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்தில் தடை, தாமதம் தோன்றும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியினருக்கு குடும்ப வாழ்க்கையில் அவ்வப்போது மனச்சந்தோஷமும், சிறு பூசல்களும் மாறிமாறி நிகழும். வருமானம் நன்றாக இருப்பினும் செலவுகள் மேலதிகமாகக் காணும். உடல்நலம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் பெரும்பாலும் சந்தோஷமாகக் காணப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருப்பினும், அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். தொழில் முன்னேற்றமுண்டு. விவாகப் பேச்சுக்கள் பெரும்பாலும் மனநிறைவைக் கொடுக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். நட்டம் போகாது. மாணவர்கள் முயற்சிக்கேற்ப பெறுபேறுகள் நன்றாக அமையும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



மிதுனராசியினருக்கு குடும்ப உறவு நன்றாக இருந்தாலும், இடையில் சிறு மனவேறுபாடுகளும் இருக்கும். இனபந்துக்களின் கொண்டாட்டங்கள் பாதிக்காது. வருமானத்திலும் பார்க்க செலவு கூடுதலாகவே காட்டும். தொடங்கும் கருமங்களில் இடையூறுகள் சம்பவிக்கும். பிரயாணத்தின் போது அலைச்சல்கள் கூடுதலாக இருக்கும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலை மாற்றங்கள் சிரமங்களைக் கொடுக்கும். வர்த்தகத்துறையினருக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். கூடுதலாகக் கடன் வியாபாரம் செய்வதால் பணம் சேருவது குறையும். மாணவர்கள் மத்தியில் கல்வியில் கரிசனை குறைந்து காணப்படும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதியின்மை உருவாகும். தேகாரோக்கியம் குறையும். வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். பொருளாதாரத்துறையில் பிரயாசைக்கேற்ற ஆதாயம் கிடையாமற் போகலாம். இனபந்துக்களுடன் மனக்கசப்புக்கள் தோன்றக் கூடும். குடும்பப் பெண்கள் நிம்மதி குறைந்து காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் காட்டும். பதவி உயர்வு பின்தள்ளிப் போகும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் விற்பனையாகாமல் இருக்கும். பழைய கடன்களையும் வசூலிப்பது கடினம். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். பரீட்சை முடிவுகள் திருப்தி தராது.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதி நிலவும். பணவருவாய் அதிகரிக்கும். தேகாரோக்கியம் இடையிடையே பாதிக்கப்படலாம். தேவையில்லாத செலவுகள் ஏற்படும். பிரயாணங்களின் போது அவதானமாகச் செயற்பட வேண்டும். விவாகம் சம்பந்தமான பேச்சுக்கள் காலதாமதத்தின்மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு தாமதமாகும். கடின உழைப்பின் மேல் பலனுண்டு. வியாபாரிகளுக்கு லாபம் மட்டுப்படுத்தப்படும். புதிய முதலீடுகளைச் செய்வது நன்று. வாடிக்கையாளர்களுக்கு ஏற்றவாறு நடந்து கொண்டால் நன்மை பெருகும். மாணவர்கள் கல்வியில் அதிக முயற்சி எடுக்க வேண்டும். கலைத்துறையினர் சித்தி காண்பர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இனபந்துக்களால் உதவி கிட்டும். பணவரவு தேவைக்குப் போதாமல் இருக்கும். பிள்ளைகளிடம் முன்னேற்றம் காணபபடும். எண்ணிய கருமங்கள் ஓரளவு கைகூடும். இனபந்துக்களின் கொண்டாட்டங்கள் குறைவாகவே இருக்கும். எனினும் பகைமை இல்லை. தெய்வ வழிபாடு கூடிய பலனைத் தரும். திருமணப் பேச்சுக்கள் தாமதம் காணும். உத்தியோகத்தர்களுக்கு காரியத் தடைகள், பொருட் செலவுகள் காட்டும். அதிகாரிகளின் ஆதரவுகள் குறைவாகவே இருக்கும். வர்த்தகத் துறையினருக்கு எதிர்பார்த்த லாபம் கிடையாது. புதிய முதலீடுகளைப் பொறுத்துச் செய்வது நன்று. மாணவர்களுக்கு உடல் நலக் குறைவு முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கும். முயற்சி பலன் தரும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசிக்காரருக்கு குடும்ப வாழ்வில் மனச்சந்தோஷம் ஏறபடலாகும். கணவன் - மனைவியிடையே அந்நியோன்யம் கூடுதலாக இருக்கும். பிள்ளைகளின் முன்னேற்றத்தால் பெற்றோர் சந்தோஷமடைவர். பணவருவாய் திருப்திகரமாக இருக்கும். தெய்வ வழிபாட்டால் பல கருமங்களைச் சாதிக்கலாம். திருமணப் பேச்சுக்களில் காலதாமதம் காட்டுகிறது. உத்தியோகத்தர்களுக்கு வேலையில் ஆர்வமும், அதிகாரிகளின் உதவியும் கிட்டும். பாராட்டுக்களும் உண்டு. வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த லாபம் கிட்டும். நகை வியாபாரிகள் கூடிய லாபம் பெறுவர். மாணவர்களுக்கு ஆசிரியரின் உதவி கிட்டும். சிலருக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்கலாம்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியினருக்கு குடும்ப வாழ்வில் அமைதி நிலவும். தாம்பத்திய சுகம் உண்டு. திட்டங்கள் யாவும் வெற்றியளிக்கும். முன்பிருந்த பணக்கஷ்டங்கள் நீங்கும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. பெண்கள் ஆடம்பரச் செலவுகளில் நாட்டமாக இருப்பர். விவாகப் பேச்சுக்களில் இருந்த தடைகள் நீங்கி மகிழ்ச்சியான வாழ்வு கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு நீண்டகால அபிலாசைகள் நிறைவு பெறும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர். பல்கலைக்கழக கல்வி கிடைக்கும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசிக்காரருக்கு அட்டமத்துச் சனியும், பத்தில் வியாழனும் நிகழ்வதால், குடும்பத்தில் அமைதி குன்றும், பணவருவாய் இருந்தாலும், எதிர்பாராத செலவுகள் தோன்றும். தேகசௌகரியம் குறையும். இதனால் வைத்தியச் செலவும் அதிகரிக்கும். புத்திரர்களால் நற்பலன் கிடையாது. எடுத்த கருமங்கள் நிறைவு பெறுவது கடினம். விவாகப் பேச்சுக்கள் காலவரையறையின்றித் தள்ளிப் போகும். உத்தியோகத்தர்களுக்கு செல்வாக்கு குறையும். அரச உதவிகள் தாமதமாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். மாணவர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பரீட்சை திருப்தியாயிராது.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு இல்லற வாழ்க்கையில் அமைதி நிலவும். குடும்ப கௌரவம் அதிகரிக்கும். பெரியவர்களின் நட்பு, உதவிகள் கிட்டும். நினைத்த கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். பொருளாதாரம் மேலோங்கும். குடும்பப் பெண்கள் ஆடை, ஆபரணங்களில் நாட்டம் கொள்வர். திருமணங்கள் நிச்சயிக்கப்படலாம். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிட்டும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நல்ல விலை போகும். வங்கி உதவிகளும் கிடைக்கும். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். சிலருக்கு உயர் கல்வி கிட்டும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசிக்காரருக்கு குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகள் ஏற்பட்டு நிம்மதி குறையும். நண்பர்களாலும், அயலவர்களாலும் தொல்லைகள் வந்து சேரும். பணவருவாய் இருந்தாலும் வீண் செலவுகளும் கஷ்டங்களும் ஏற்படும். தேகாரோக்கியம் பாதிக்கப்படும். குடும்பப் பெண்களும் பல பிரச்சினைகளை வாங்கிக் கொள்வர். பொறுமையைக் கடைப்பிடிப்பது நன்று. திருமணப் பேச்சுக்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடையாது. வியாபாரிகளுக்கு நட்டம் ஏற்படலாம். முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு முன்னேற்றம் தடைப்படும். பரீட்சை முடிவுகள் திருப்தி தராது.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியினருக்கு குடும்பத்தில் அமைதியும், குடும்ப அங்கத்தவரிடையே புரிந்துணர்வும் ஏற்படும். தம்பதிகளிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். கருமங்கள் திட்டமிட்டவாறு நிறைவேறும். பணவருவாயும், செல்வாக்கும் அதிகரிக்கும். தேகசுகம் பாதிப்படையாமலிருக்கும். தெய்வ வழிபாடு பலவகையாலும் நன்மை தரும். விவாகப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு பல வகையாலும் நற்பலனுண்டு. ஊதிய உயர்வு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் லாபகரமாக இருக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். கடன்களும் வசூலாகும். மாணவர்கள் செல்வாக்குடன் திகழ்வர். கணிதத்துறையினர் கூடிய லாபம் பெறுவர்.




சிறப்பு நாடக அளிக்கை

TRRO LIMITED

Active Theatre Movement

2004, டிசம்பர் 19ம் திகதி
காலை 10.30 மணி, மாலை 3.30 மணி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கை கொடுப்போம்

*உயிருள்ள ஆத்மா நான்*
*ஊமாய் உட்கார்ந்து ஒன்றுமே அற்று*
*சும்மா இருக்க முடியாது*
*சென்றுமவை இக்கணங்களில்*
*கழன்று உழலும் நெஞ்சக் குமுறல்கள்!*
*நெஞ்சக் கணப்பை மேலும்*
*அதிகமாக்கும்!!!*
*இறந்தவரல்ல நான்*
*இதயம் துடிக்கும் ஏழைப் பெண்கள்*
*மண்ணின் குழந்தைகள் மானிடப்*
*பெண்கள் நாம்.*
*(சுல்பிகா)*

சிதைக்கப்பட்ட ஆளுமைகளை சித்தரிக்கும் நாடக ஆற்றுகை

பெண்களின் ஆளுமைகள் சிதைக்கப்பட்டு, அவர்களுக்கென வாழுதல் மறுக்கப்பட்டு, துயரத்தின் குறியீடாய் மாறிப் போனவர்களாக, தம்மீதான அடிமைத் தளைகளையே அணிந்து இவ்வாழ்வே சுகமென எண்ணவும் பழக்கப்பட்டவர்களாய், வரலாற்றில் வஞ்சிக்கப்பட்டவர்களாய் உள்ளார்கள். மௌனப் போர்வையை சுமந்து இன்று அதிலிருந்து அவர்களது முனறல்களும், முனுமுனுப்புகளும் மெல்ல மெல்ல வெளியில் வரவும், மனிதத்தின் மனச் சாட்சிகளை விசாரணைக்கு உட்படுத்துகின்ற நிலை எழத் தொடங்கியுள்ளது. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர், அடிமைப்படுத்தி வைத்திருக்கும் போலிக் கருத்துகளில் இருந்தும், அவற்றைக் கட்டிக் காக்கும் அமைப்புகளிடம் இருந்தும் விடுதலை நோக்கிச் சிந்திப்பவர்கள் 19.12.2004 அன்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழவுள்ள ஆற்றுகையை சந்திப்பது சாத்தியமானது. இவ்வாற்றுகையின் உள்நின்று ஒளிரும் கருத்துக்கள் உங்களை மேலும் மெருகூட்டும் என்பதில் ஐயமில்லை.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித்திட்டமானது, வறிய பெண்களின் பொருளாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு, தே.தேவானந்தின் "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" எனும் நாடக ஆற்றுகையை செயற்திறன் அரங்க இயக்கம் தயாரித்துள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்...** - த.தவரூபன்

# மின்னரசுக்கான ஏது நிலைகளும் தமிழ் தகவல் தொழில் நுட்பமும்

(தொடர்ச்சி)

நாடுதழுவிய ரீதியில் பெருமளவிலான கருத்தரங்குகளை நடத்தியமை, வன்னி மாவட்டம் போன்ற பின்தங்கிய பிரதேசங்களில் கணினிப் பயிற்சியை வழங்கியிருக்கின்றமை, ஆசிரியர் அலுவலர்களுக்கான கணினிப்பயிற்சிகளை நாடுதழுவிய ரீதியில் தமிழர் பிரதேசங்களில் மேற்கொண்டமை, பெருமளவிலான கணினிப் பயிற்சி மையங்களை நிறுவி, அவற்றினூடாக இலவச மற்றும் சலுகை அடிப்படையிலான பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றமை, இறுதியாக கிளிநொச்சியில் லண்டன் சிறிகனகதுர்க்கையம்மன் நிதியத்தின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட இலவச சிறுவர் கணினிப் பூங்காவை பராமரித்து வருகிறது. இத்தருணத்தில் லண்டன் சிறி கனகதுர்க்கையம்மன் நிதியத்தின் சேவைகளையும் பாராட்டியாக வேண்டும். அவர்களால் ஈழத்தில் தமிழ் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்காக கணிசமான நிதி முதலிடப்பட்டிருக்கிறது.

வன்னித் தொழில்நுட்ப நிறுவகமும் பின் தங்கிய அந்த மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்ப அறிவை பெருக்குவதற்கும் தன்னாலான பங்களிப்புக்களைச் செய்து வருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், பொருண்மிய மதியுரையகமும் அவ்வாறே தமிழர் பிரதேசங்களில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அடிமட்டத்தில் இருந்து உதவுகின்றன. இதைவிட இங்கு குறிப்பிடாத கல்வி நிலையங்களும், அமைப்புக்களும் கருத்தரங்குகளையும், கணினிப் பயிற்சிநெறிகளை யும் வழங்கி வருகின்றமையானது, ஈழத்தில் சிறந்த தமிழ் தகவல் தொழில்நுட்பச் சமுதாயம் கட்டியெழுப்பபடுவதற்கான சாத்தியத்தை எடுத்துரைக்கின்றன. போரால் அல்லலுற்ற எமது மக்களுக்கு தற்போது குறைந்த செலவில் தமது கணினி அறிவை வளர்க்க உதவி வழங்கப்படவேண்டியிருப்பதே தற்போது அவசர பணியாகும்.

உத்தமத்தைப் பொறுத்தவரையில், இலங்கையில் இவ்வருடம் கொழும்பில் இணையக் கருத்தரங்கை செய்திருக்கிறது. அதற்கு அதன் தலைவர் கொழும்பு வந்து சென்றார் என்னும் அதனைப் பொறுத்தவரையில் நேரடியாக செயற்பாடுகளைப் பிராந்திய ரீதியில் முன்னெடுப்பதைவிட உலகளாவிய ரீதியில் தரப்படுத்தல் போன்ற செயற்பாடுகளிலேயே கவனம் செலுத்த முடிகிறது. எப்படியிருப்பினும் இவ்வருடம் உத்தமத்துடன் இணைந்த இலங்கைத்தமிழ் ஆர்வலர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிலிருந்து நாம் உத்தமத்தின் செயற்பாடுகளை பரவலாக ஈழத்தவர்கள் ஏற்றிருக்கிறார்கள் என்று பொருள் கொள்ளலாம்.

*சிங்கப்பூரில் நடைபெற்ற 7 ஆவது உலகத் தமிழர் தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் வெப் தமிழன், ஆசிரியர் தவரூபன் சமர்ப்பித்த கட்டுரை.*

இன்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இணையத் தளத்தின் மூலம் சேவைக்கான பாவனையாளர் கட்டணத்தை கடனட்டை மூலம் செலுத்தமுடியும். தொலைபேசிக் கட்டணங்களும் அவ்வாறே. ஆனால் மின்சாரக் கட்டணங்களை கட்டுவதற்கான ஏற்பாடுகள் இதுவரை மின்சார சபையின் இணையத்தளத்தில் செய்யப்படவில்லை. ஆயினும் இங்குள்ள தனியார் வங்கிகளின் இணையத் தளங்களின் மூலமும், தானியங்கி இயந்திரங்கள் (ATM) மூலமும் மின்சாரக் கட்டணங்கள் செலுத்தப்பட முடியும். இவ்வாறான சேவைகள் அரச வங்கிகளாலும் மேற்கொள்ளப்படவேண்டும்.

இங்குள்ள அநேகமான வங்கிகள் (அரசாங்க வங்கிகள் உட்பட) தமது கிளைகளை வலைப்பின்னலில் இணைத்துவிட்டன. இவற்றின் தானியங்கி இயந்திரங்கில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கிறன. கிராமப்புறங்களில்கூட தானியங்கி வங்கி நடவடிக்கைகள் பிரபல்யம் பெற்றுவருகின்றன. இருந்தபோதிலும் இணையவழி வங்கிநடவடிக்கைகளில் பங்குகொள்ளும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கின்றது. பாதுகாப்புக்குறித்த அச்சமும் தெளிவான இணைய அறிவின்மையும், மொழிப்பிரச்சனையும் இதற்கு தடைக்கல்லாயிருக்கின்றன. வங்கிகளின் இணையவழி நடவடிக்கைகளில் மொழிப்பிரச்சினையை தீர்க்க எல்லாமொழிகளிலும் எழுத்துருப்பாவனையை புகுத்துவது மிகப் பெரிய சவாலாகவே உள்ளது. இது பாதுகாப்புடனும் சம்பந்தப்பட்டது என்பதே காரணம். (தொடரும்)

# மாவோ கிளர்ச்சிவாதிகளுடன் நேபாள படையினர் கடும்மோதல்

## இருதரப்பிலும் பாரிய உயிரிழப்பு



(காத்மண்டு)

நேபாளப் படையினருக்கும், மாவோ கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் கடந்த இரண்டு நாட்களாக இடம் பெற்ற வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் 21 படையினரும், 29 கிளர்ச்சிவாதிகளும் கொல்லப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை நேபாளத்தின் அக்கான்சி பகுதியில் பொலிஸார் மற்றும் படையினர் மீது கிளர்ச்சிவாதிகள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் 20 பொலிஸாரும், ஒரு படைவீரரும் மற்றும் 6 கிளர்ச்சிவாதிகளும் கொல்லப்பட்டனர்.

நேபாளத்தில் அரச மற்றும் கிளர்ச்சிவாதிகளுக்கிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்த பின்னர் படைத்தரப்பு சந்திக்கும் பாரிய இழப்பு இதுவாகும். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு மேலதிகப் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேபாளத்தின் டைலெக் மாவட்டத்தில் தாம் நடத்திய தாக்குதலில் 17 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாக நேபாள படையினர் அறிவித்துள்ளனர் இந்தத் தாக்குதலில் பெருமளவு ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களும் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் படையினர் தெரிவித்தனர்.

லாம்ஜங் மாவட்டத்தில் தொலைத்தொடர்பு நிலையமொன்றைக் கிளர்ச்சிவாதிகள் தாக்க முறபட்டவேளை, அதனைப் படையினர் முறியடித்ததாகவும் இதன்போது ஆறு கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்ட அதேவேளை, ஆறு படையினரும் காயமடைந்தனரெனவும், கொல்லப்பட்ட கிளர்ச்சிவாதிகளின் ஆறு உடல்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் படையினர் தெரிவித்தனர்.

இந்த இரு தாக்குதல்களிலும் பெருமளவான கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாக நேபாள அரசாங்கம் தெரிவித்தபோதிலும், அதனை மாவோ கிளர்ச்சிவாதிகள் மறுத்துள்ளனர். இந்த மோதல் சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக வெளிவரும் தகவல்கள் வேறுபட்டுக் காணப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஈராக்கில் இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட இத்தாலியப் பிரஜையைச் சுட்டுக்கொல்வதற்குத் தயார் நிலையிலுள்ள இரண்டு கிளர்ச்சிவாதிகளைக் காணலாம்.

# இஸ்ரேலிய தாங்கிகள் தாக்குதல் 2 பலஸ்தீனர் பலி! 8 பேர் காயம்!!

இஸ்ரேலியத் தாங்கிகள் காஸா பிரதேசத்தின் குடியிருப்புப் பகுதியில் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் எட்டுப்பேர் காயமடைந்ததாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸாவின் கான்யுனிஸ் குடியிருப்புப் பகுதியிலேயே இஸ்ரேல் படையினரின் தாங்கிகள் இந்தத் தாக்குதலை நடத்தின. அத்துடன் இந்தத் தாங்கிகள் அப்பகுதியில் முன்னேறிச் சென்றதால் பலஸ்தீனர்களின் பல குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்தப் படை நடவடிக்கை ஜெவிஸ் குடியிருப்புப் பகுதிமீது நடத்தப்படும் மோட்டார்த் தாக்குதலைக் குறைப்பதற்கானதே எனவும், பலஸ்தீன கிளர்ச்சிவாதிகள் இந்த முகாம் பகுதியிலிருந்தே மோட்டார் தாக்குதலை நடத்தி வருவதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இந்த வாரத்தில் மட்டும் இந்தக் குடியிருப்புப் பகுதிமீது கிளர்ச்சிவாதிகள் முப்பது றொக்கட் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் இஸ்ரேல் இராணுவம் மேலும் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலுக்கு முன்னர் எகிப்தின் எல்லைப்பகுதியிலுள்ள காஸா நிலப்பரப்பின் றபா அகதி முகாமில் அமைந்துள்ள தச்சுத் தொழிற்சாலை மீது இஸ்ரேலிய ஹெலிகள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

உலக நோக்கு

# தனது சட்டத்தரணியை சதாம் நேற்று சந்தித்தார்



ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அமெரிக்கப் படைகளால் கைதுசெய்யப்பட்டு ஒரு வருடத்திற்குப் பின்னர் தற்போது முதன்முறையாகத் தனது சட்டத்தரணி ஒருவரைச் சந்தித்துள்ளார்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பெயர் வெளியிடப்படாத இடத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சதாமும் அவரது 11 உதவியாளர்களும் போர்க்குற்றம் மற்றும் இன அழிப்புத் தொடர்பான விசாரணைகளுக்காக ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப பிடத்தக்கது. இதேவேளை சதாம் மீதான விசாரணை இரண்டு வருடங்களுக்குள் ஆரம்பமாகமாட்டாதென ஜோர்தானைத் தளமாகக் கொண்ட சதாமின் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

ஆனால், சதாமின் உதவியாளர்கள் மீதான விசாரணை அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படுமென ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயாட் அலாவி தெரிவித்தார். இவர்கள் மீதான விசாரணை பூர்வாங்கமானதாகவே இருக்குமென மேற்குலக இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே சதாம் ஹுசைனுக்காக ஆஜராக நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகள் குழாமை சதாமின் குடும்பத்தினர் நீக்கிய பின்னர் புதிய சட்டத்தரணிகளை அவர்கள் நியமித்துள்ளனர்.

இந்த பெயர் குறிப்பிடமுடியாத இடத்திற்கு கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயே அந்தச் சட்டத்தரணி அழைத்துச் செல்லப்பட்டதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

சதாமைச் சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி சியாட் அல் - கசாவ்னெ - சதாம் நல்ல தேகாரோக்கதியத்துடன் உள்ளதாகவும், அவர் மன ரீதியாக மிகவும் உறுதியாக உள்ளதாகவும் தெரிவித்தார். சதாம் பாக்தாத்திற்கு அருகிலுள்ள அமெரிக்கப்படைகளின் குரொப்பர் முகாமிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஈராக் அதிகாரிகள் தெரிவித்த போதும், இந்தத் தகவலை ஒரு போதும் அமெரிக்க இராணுவம் உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காபூல் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் தப்பிச்செல்ல முயற்சி!

ஆப்கான் தலைநகர் காபூலில் உள்ள புல்.இ.சார்க்கி சிறைச்சாலையில் உள்ள கைதிகள் தப்பியோட மேற்கொண்ட முயற்சியின் போது ஏற்பட்ட மோதலில் இரு சிறைக்கைதிகளும் மூன்று சிறைச்சாலைக்காவலர்களும் பலியாகி உள்ளனர்.

அல் - கொய்டாத் தீவிரவாதிகளின் உறுப்பினர்கள் எனக் கருதப்படும் ஈராக் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த இரு சிறைக் கைதிகள் சிறைச்சாலையில் இருந்து தப்பிச்செல்ல முறபடுகையிலேயே இந்த மோதற்சம்பவம் ஏற்பட்டது.

அதிகாலைவேளையில் சிறைக்காவலர் ஒருவர் கைதிகளைத் தொழுகைக்காக அழைத்துச் சென்றவேளையில், காவலர்களைத் தாக்கிவிட்டு அவரது துப்பாக்கியைக் கைப்பற்றிய கைதிகள் இருவரும், சிறைக்காவலர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சிறைக்கைதிகளுக்கும் சிறைக்காவலர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரு கைதிகளும் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், கைதிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறைக்காவலர்கள் மூவர் பலியாகியுள்ளனர்.

இதனையடுத்து இறந்த கைதிகள் இருவரது துப்பாக்கிகளை எடுத்துக்கொண்ட மற்றைய கைதிகள், சிறைச்சாலைக் கட்டடத்தின் இரண்டாம் தளத்திற்குச் சென்று போரினால் சிதைவடைந்திருந்த சிறைச்சாலையின் ஒருபக்கச் சுவரில் துளையிடமுயன்றுள்ளனர்.

இதனையடுத்துக் காபூல் நகரப் பொலிஸார் அழைக்கப்பட்டு சிறைச்சாலையை அண்மித்த பகுதிகளில் யாவும் சுற்றிவளைக்கப்பட்டன.

இரண்டாவது தளத்தில் மறைந்துள்ள இரு தீவிரவாதிகளையும் கைதுசெய்வதற்கான முயற்சிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும், சிறைச்சாலை வளாகம் வெகு விரைவில் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும் எனவும் ஆப்கான் உள்துறை அமைச்சின் பேச்சாளர் லூட்புல்லா மாஸ்கல் தெரிவித்தார்.

# உயிருடன் இருக்கும்போதே நரசிம்மராவுக்கு அஞ்சலி!

இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் கடந்த வெள்ளிக்கிழமை மூச்சுத் திணறல் இருதயம், சிறுநீரக் கோளாறு காரணமாக டெல்கியில் உள்ள அகில இந்திய விஞ்ஞான கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு டொக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நரசிம்மராவின் உடல்நிலை மோசமடைந்தது. இந்த நிலையில் குருஷேத்திரா என்ற இடத்தில் நடைபெற்ற விழாவில் ஹரியானா முதல்வர் சவுதாலா கலந்துகொண்டார்.

அப்போது ஹரியானா பொலிஸ் நுண்ணறிவுப் பிரிவு அதிகாரிகள், நரசிம்மராவ் இறந்ததாக முதல்வரிடம் தெரிவித்தனர். உடனடியாக முதல்வர் சவுதாலா விழா மேடையில், முன்னாள் பிரதமர் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது.

இந்த நிலையில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்பது தெரியவந்ததும், முதல்வர் சவுதாலா அதிர்ச்சி அடைந்தார்.

இது தொடர்பாக சி.ஐ.டி பிரிவில் பணியாற்றும் பொலிஸ் டி.எஸ்.பி சுபாஷ் சந்திரசர்மா, இன்ஸ்பெக்டர் லஷ்மண்சிங் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டனர். பொலிஸாரான பிரியேஷ் மிஸ்ரா பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டார்.

# இளைஞரை விழுங்கிய சுறாவை கொல்ல அவுஸ்ரேலிய அரசு உத்தரவு



(சிட்னி)

அவுஸ்ரேலிய கிழக்கு பகுதியில் உள்ள உல்லாசக் கடற்பரப்பில் இளைஞன் ஒருவனை விழுங்கிய பாரிய வெள்ளை இனச்சுறாவினை சுட்டுக்கொல்லுமாறு அவுஸ்ரேலியப் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்தவாரம் அவுஸ்ரேலியக் கிழக்குக்கரையில் உள்ள உல்லாசக் கடற்கரைப்பிரதேசத்திற்கு நிக் என்ற இளைஞன் நண்பர்களுடன் படகில் சென்றவேளை தவறுதலாகக் கடலில் வீழ்ந்தார்.

கடலினுள் வீழ்ந்த நிக், நீந்த முறபட்டவேளையில் அப்பகுதிக்கு வந்த 5 மீற்றர் நீளமான பாரிய வெள்ளைநிறச்சுறா ஒன்று நிக்கினைக் கடித்து குதறியபின்னர் விழுங்கியது. இந்தப் பரிதாபகரமான சம்பவத்தினைக் கடற்கரையில் கூடியிருந்த பெருந்தொகையான மக்கள் கண்டுள்ளனர்.

குறிப்பிட்ட வெள்ளை இனச் சுறா பாதுகாக்கப்பட்ட விலங்கினமாக அறிவிக்கப்பட்டபோதும் இச் சுறாவினால் மனித உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் கட்டாயம் கொல்லப்படவேண்டும் என அவுஸ்ரேலிய கடல்வள, சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகாரியான புளோயிட் தெரிவித்தார்.

தனது மகனினை விழுங்கியமைக்காக அந்தச் சுறாவினைக் கொல்லவேண்டிய அவசியம் இல்லையென நிக்கினது தந்தையான பீற்றர்சன் தெரிவித்துள்ள நிலையிலும், இந்தச் சுறாவினைக் கொல்வதென அவுஸரேலியப் பொலிஸார் முடிவெடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட சுறா தென்பட்ட கடற்பிரதேசங்களில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அண்மைய சில மாதங்களாக அவுஸ்ரேலிய கடற்பரப்பில் சுறா மீன்களால் மக்கள் தாக்குதலுக்கு உள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த மாதம் அவுஸ்ரேலிய வடகிழக்கு கடற்கரை பிரதேசத்தில் வயோதிபர் ஒருவர் சுறா ஒன்றினால் விழுங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## கணிதபாட வினாத்தாள் வெளியானது குறித்து விசாரணை

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் எண்கணிதபாட வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது தொடர்பான விசாரணைகளை பரீட்சைத்தினைக்களம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இதையடுத்து நாச்சாடுவ முஸ்லிம் வித்தியாலய பரீட்சை மண்டபத்தில் கடமையில் இருந்த உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் மாத்தளை, பிரியந்தல, சந்தலங்காவ, கேகாலை ஆகிய இடங்களில் மாணவர்களுக்குப் பதிலாக மோசடி நபர்கள் பரீட்சை எழுத நிலையத்துக்கு வந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காலி துறைமுகத்தை படம்பிடித்தவர் கைதாம்!

காலித்துறைமுகத்தை வீடியோ படம் பிடிக்க முயற்சித்தார் எனத் தெரிவித்து குடும்பஸ்தர் ஒருவரை கடற்படையினர் கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக காலி துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர் சிறிசரணங்கர மாவத்தை களுபோவில தெஹிவளையைச் சேர்ந்த டபிள்யு. கே.யுவராஜ் (வயது-50) என படைத்தலைமையகம் தெரிவித்தது.

காலித்துறைமுகத்தையும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களையும் இவர் வீடியோ படம் பிடிப்பதற்கு முயன்ற வேளையே கடற்படையினர் இவரைக்கைது செய்ததாகவும் பின்னர் இவர் துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர்கள் இவரது வீடியோ கமராவையும் இவரையும் தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் படைத்தலைமையகம் தெரிவித்து.

## வரலாறு தந்த வல்லமை ஒலிப்பேழை அறிமுகவிழா!

மாலதி படையணியினரால் இசைவாணர் கண்ணனின் இசையமைப்பில் உருவான 'வரலாறு தந்த வல்லமை' என்ற பாடல் ஒலிப் பேழை அறிமுக விழா இன்று யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இந்த அறிமுக விழாவில் 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த கப்டன் அமுதினியின் தாயார் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

இந்த நிகழ்வில் ஒலிப்பேழை உருவாக்கத்துக்காக உழைத்த கலைஞர்கள் கௌரவிப்பும் இடம் பெறும்.

## சொத்துச் சேர்ப்பு வழக்கில் எஸ்.பிக்கு அழைப்பாணை

சட்டவிரோதமாக சொத்துக்கள் சேர்த்ததாகக் குற்றச் சாட்டின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்காவை இம் மாதம் 28ஆம் திகதி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

லஞ்ச ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரத்தை பரிசீலனை செய்த பின்னர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிவான் இந்த அழைப்பாணையை விடுத்தார்.

1994ஆம் ஆண்டு மார்ச்மாதம் 31ஆம் திகதி தொடக்கம் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சட்டபூர்வமான தமது வருமானத்தை விடவும் கூடுதலாக 2 கோடி 90 லட்சம் ரூபாவைச் சம்பாதித்துள்ளதாக திசநாயக்கா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# எரிபொருள் விலைகளை அதிகரிக்குமாறு பரிந்துரை

எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டும் என மாதாந்த எரிபொருள் விலைகளை பரிசீலனை செய்யும் குழு தெரிவித்துள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் பெற்றோல் 6 ரூபாவாலும் ஒரு லீற்றர் டீசலின் விலை 10.50 சதத்தாலும், ஒரு லீற்றர் மண்ணெண்ணையின் விலை 21 ரூபா 50 சதத்தாலும் அதிகரிக்க வேண்டும் என்று மாதாந்த எரிபொருளின் விலையை பரிசீலனை செய்யும் குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் தை மாதம்வரை இந்த விலை அதிகரிப்பை வழங்குமாறு மின்சார மற்றும் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடமும் திறைசேரியிடமும் இந்தக் குழு கேட்டுள்ளது.

இதன் பிரகாரம் தற்போது லீற்றர் 68 ரூபாவாக இருக்கும் பெற்றோல் 74 ரூபாவாகவும், டீசல் லீற்றர் 42 ரூபாவிலிருந்து 52.50 சதம் வரையும், மண்ணெண்ணையின் விலை 25.50 சதத்தில் இருந்து 46 ரூபாவுமாக விலை அதிகரிக்க வேண்டுமென மாதாந்த எரிபொருள்களின் பரிசீலனை செய்யும் குழு தெரிவித்துள்ளது.

மார்கழி மாதம் முதல் தை மாதம் வரை இந்த விலை அதிகரிப்பு வழங்காவிட்டால் அதிகரிக்க வேண்டிய விலைக்களுக்கு சமமான மானியத்தை கனிப்பொருள் கூட்டுத்தாபனத்துக்கும். இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனத்துக்கும் வழங்குவதற்கு திறைசேரி தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஓமந்தையில் இளைஞன் கைது

(வவுனியா)

ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பிரவேசிக்க முயன்ற இளைஞன் ஒருவனை படையினர் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் ஓமந்தை ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைய முயன்றபோது துணுக்காய், நெட்டியன் குளத்தைச் சேர்ந்த ஜி.திவாகரன் (வயது 20) என்ற இளைஞனே கைது செய்யப்பட்டவராவார்.

இவரிடம் உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை என்றும் - 7 லட்சத்து 52 ஆயிரம் ரூபா பணம் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### மீண்டும்...

லும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது.

மக்களுக்கு அனுகூலமான வரவு - செலவுத் திட்டத்தை அரசாங்கம் சமர்ப்பித்துள்ளதால் ஐக்கிய தேசிய கட்சி இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் அந்தக் கட்சிக்குள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனவும் அனுரா தெரிவித்துள்ளார்.

### சங்கமித்தை..

கமையவே இந்த விகாரை அமைககும் பணி இடம் பெற்றுவருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.குடாநாட்டுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்ட வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி சங்கமித்த விகாரைக்கான அடிக்கல் நாட்டியிருந்தார்.

சங்கமித்தை மாதகலில்தான் தரையிறங்கியதாக அண்மைக் காலமாக கடற்படையினர் தென் பகுதி சிங்கள சுற்றுலா பயணிகள் மத்தியில் பிரசாரம் செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

### வல்லை....

பெற்று வருகின்றன. திருத்தப்பணிகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே இன்றிரவு எட்டு மணிமுதல் வல்லைப்பாலம் ஊடான போக்குவரத்து தடைசெய்யப்படவுள்ளது.

நாளை அதிகாலை 5 மணி வரை போக்குவரத்து தடைசெய்யப் பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டதாரிப்பயிலுனர்களுக்கு செவ்வாயன்று நியமன கடிதம்!

### கொழும்பில் நடைபெறும்

பட்டதாரிப் பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் எதிர் வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்குவார்.

இந்த வைபவத்தில் கலந்து கொள்வதற்காக நாட்டிலுள்ள அனைத்துப் பயிற்சி நிலையங்களிலும் இருந்து மூன்று ஆண் பட்டதாரிப் பயிலுனர்களும் மூன்று பெண்பட்டதாரிப் பயிலுனர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து பயிற்சி பெற்றுவரும் அனைத்துப் பட்டதாரிகளுக்குமான நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

## தென்பகுதியில் பரவும் புதுவித வைரஸ் காய்ச்சல்

### ஆறு பேரைப் பலியெடுத்தது

தென்பகுதியில் பரவிவரும் புதிய வைரஸ்காய்ச்சலினால் இதுவரை ஆறுபேர் உயிரிழந்ததுடன் பெருமளவானோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தக் காய்ச்சல் எந்த வைரசினால் ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறியமுடியாது உள்ளதாக தெரிவித்துள்ள தொற்றுநோய்த்தடுப்புப் பிரிவினர் இந்த காய்ச்சலின் தொற்றினால் மாத்தறை மற்றும் எம்பிலிப்பிட்டிய பகுதி மக்களே பெரிதும் பீடிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த வகைக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களது குருதி மாதிரி வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் ஆராய்ச்சிகளின் பின்னரே இந்த நோய்பற்றிய விபரங்கள் வெளியாகும் எனவும் தெரிவித்தனர்.

### இந்திய விமானத்தில்...

தாகத் தெரியவருகிறது.

இதேவேளை இந்த கூட்டுப் பயிற்சி குறித்து இலங்கை கடற்படை தெளிவான தகவல்கள் வெளிவருவதைத் தடுத்து குழப்பமான தகவல்களை வெளியிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

முன்னர் 14 ஆம் திகதி முதல் 3 நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட இந்தப் பயிற்சிக்காக இந்திய கப்பல்களும் வைஸ் அட்மிரல் ஏ.கே.சிங்கும் ஏற்கனவே கொழும்பு வந்திருந்தபோதும் நேற்று முன்தினம் மட்டுமே இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

அத்துடன் இந்தப் பயிற்சியில் கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களான சயுரே மற்றும் ஜ[illegible] சாகரவுடன் பீரங்கிப் படகு மற்றும் ஒரு டோறா தாக்குல் படகுமே பங்குபற்றும் என இலங்கை கடற்படை கூறியிருந்தது.

ஆனால் இந்தப் பயிற்சியில் சயுர, ஜயசேகர ஆகிய கப்பல்களுடன் கடற்படையின் பிரதாப என்ற பீரங்கிப் படகும் நான்கு அதிவேக டோறா தாக்குல் படகுகளும் பங்குபற்றியிருந்ததாக புதிய தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் பயிற்சியில் சுமார் 400 கடற்படையினரும் பங்கு பற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

UNIT
எமது கையிருப்புகள்......!!! யாவும் கொழும்பை ஒத்த விலையில்
DELL Monitors @ Local Rate
DELL Branded products
We Deal only No.1 Products
P III & PIV MOTHER BOARDS
PIII & PIV ATX POWER SUPPLIES
PS2 & USB KEYBOARDS & MOUSE
PS2 & USB MOUSE (WHEEL & OPTICAL)
ALL KIND OF BRANDED & UNBRANDED CDS, FLOPPIES
FLOPPY AND CD COVERS & HOLDERS
சகல PIV கணனிகளும் சலுகையுடன் 3 வருட மாற்றுதலுக்கான முழு உத்தரவாதம்
Products Available @ Colombo Price
Intel Processors
Hard disks (40, 60, 80 & 120 Gbs)
Lower & Higher End International Standard Woofers
Internal & External (USB) Modems
NECK & Head phones
Network Cards, Hubs & Switches
Lower End & High Multimedia Speakers
Lower & Higher End ATX Casings
Woofer கள் 1500/- முதல்
All branded CDROMs, Writers, Combo's
All kinds of Scanners & Printers
All kind of Cooling Fans
All kind of UPSs
All kind of pen drives & Flash Memories
All size of Memories
Computer Tables & Etc.
Free Demo
உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்





இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்தனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடனான சந்திப்பின் போது - யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 9 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகங்களது குறை நிறைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பின்போது, கருத்துத் தெரிவித்த யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வகுமார் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது, யாழ். பல்கலைக்கழகத்தில் பாரிய குறைபாடுகள் நிலவுகின்றது. ஆனால் யாழ். பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுத்தவரையில் இவை தற்போது முக்கியமானவை அல்ல.

குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரையில் சமாதானம் என்ற ஒன்றே முக்கியமானதாகும்.

எனவே, விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் எனவும், நாட்டில் சமாதானம் நிலவுமானால் அனைத்து தேவைகளும் இயல்பாகவே பூர்த்தியாகும் எனவும் தெரிவித்தார்.

# நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத பணிக்கண்டி - வெள்ளவாய்க்கால்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கல்வயல் கிராம்புவில் வயல்வெளியையும், மாணாவளை வயல்வெளியையும் இணைக்கும் பனிக்கண்டி வெள்ளவாய்க்கால் பல ஆண்டுளாகப் பராமரிப்பின்றி தூர்ந்த நிலையிலுள்ளது.

இந்த வாய்க்கால் ஊடாகவே கிராம்புவில் வயல் வெளியில் தேங்கும் மேலதிக மழை நீர் வடிந்தோடும். இந்த வாய்க்கால் ஆண்டு தோறும் சாவகச்சேரி நகரசபை அலுவலர்களால் துப்புரவு செய்யப்படுவது வழக்கம். இது பல வருடங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வாய்க்காலின் நடுப்பகுதியில் துருசு அமைக்கப்பட்டு வெள்ள ஓட்டம் தடுக்கப்பட்டு, மேலதிகமாக நீர்தேங்கும் சந்தர்ப்பங்களில் திறந்து விடப்படுவதும் வழக்கம். தற்போது இவை எதுவும் நடைமுறையில் இல்லாததால், கிராம்புவில் பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (24)

# வாகன வருமானவரி உரிமத்துக்கு விண்ணப்பிப்பவரை உறுதிப்படுத்தவும்

வாகனங்களுக்கான வருமான வரி உரிமங்கள் வழங்கும்போது இடம்பெறும் துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கும் முகமாக, வருமான வரி உரிமங்களின் வாகன உரிமையாளர்கள் விண்ணப்பிக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் சி.ரங்கராஜா சகல பிரதேச செயலகங்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

வாகன உரிமையாளர் அல்லாத ஒருவர் அதற்கான வாகன வரி உரிமத்தைப் பெறுவதைத் தடுக்கும் நோக்குடன் விண்ணப்பதாரிகளின் தேசிய அடையாள அட்டையைப் பரிசீலிக்கும் படியும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (24)

# யாழ்.பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம அலுவலர்கள் இடமாற்றம்!

யாழ்.பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சில கிராம அலுவலர்கள் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விபரம் -

ஜே/62 கொழும்புத்துறை கிழக்கு கிராம அலுவலராகப் பணிபுரிந்த புஸ்பராணி - ஜே/63 கொழும்புத்துறை மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கும், ஜே/63 கொழும்புத்துறை மேற்கு கிராம அலுவலராகப் பணிபுரிந்த கமலவேணி- ஜே/62 கொழும்புத்துறை கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்கும் -

ஜே/71 குருநகர் மேற்கு கிராம அலுவலராகப் பணிபுரிந்த எஸ். ஞானசேகரன் - ஜே/73 யாழ்.நகர் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கும், ஜே/73 யாழ்.நகர் மேற்கு கிராம அலுவலராகப் பணிபுரிந்த பஞ்சலோகரஞ்சன்- ஜே/74 யாழ்.நகர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்கும், ஜே/74 யாழ் நகர் கிழக்கு கிராம அலுவலராகப் பணிபுரிந்த கே.வித்தியானந்தம்- ஜே/64 பாசையூர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்கும், ஜே/75 சுண்டுக்குளி தெற்கு கிராம அலுவலராகப் பணிபுரிந்த கே.விஜயரத்தினம்- ஜே/77 மருதடி கிராம அலுவலர் பிரிவுக்கும், ஜே/76 சுண்டுக்குளி வடக்கு கிராம அலுவலராகப் பணிபுரிந்த ஆர்.சிவானந்தம்- ஜே/75 சுண்டுக்குளி தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கும், ஜே/77 மருதடி கிராம அலுவலராகப் பணிபுரிந்த எஸ்.மகாலிங்கம் - ஜே/76 சுண்டுக்குளி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்கும் 01.12.2004 தொடக்கம் பிரதேச செயலாளரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் விருது வழங்கும் போட்டி நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்படும் தேசிய இணையவிருது வழங்கும் கலாசாரப் போட்டி நிகழ்ச்சி, நாளை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவி இயக்குநர் ரி.சிவதெட்சணாமூர்த்தி அறிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த விருது வழங்கல் போட்டியில் - இம்முறை பரத நாட்டியம், கிராமிய நடனம், புதிய நிர்மாணிப்பு நடனம், சாஸ்திரிய பாடல், கிராமியப் பாடல், மேற்கத்தேய - கீழைத்தேய வாத்தியப் போட்டிகள் போன்றன இடம்பெறவுள்ளன.

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இந்த மாவட்ட போட்டி நிகழ்வில், யாழ். மாவட்டத்திலிருந்து தோற்றியவர்களில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் தேசிய மட்டத்தில் முதலாவது இடங்களைப் பெற்று, பரிசில்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நிகழ்வில் பங்குபற்றுவதற்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், போட்டிகளுக்கு விண்ணப்பித்தும் அழைப்புக் கடிதம் கிடைக்காத போட்டியாளர்களையும் நிகழ்வில் பங்குபற்றுமாறும் யாழ். மாவட்ட உதவி இயக்குநர் அறிவித்துள்ளார்.

## சிறுவர்களுக்கு நுளம்புவலை

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்குட்பட்ட வயோதிபர்கள், சிறுவர்களைக் கொண்ட 75 குடும்பங்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நுளம்பு வலைகளை வழங்கவுள்ளதாக என்.நவரட்ணம் தெரிவித்துள்ளார். (25)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : வி.தினேஸ்
முகவரி : சித்தங்கேணி.

அகவை மூன்று



பெயர் : அ.பானுகா
முகவரி : அளவெட்டி.

அகவை ஐந்து



பெயர் : ஐ.கிறேஸ்போல்
முகவரி : குருநகர்.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ---------------

முகவரி : ---------------

பிறந்த ஆண்டு: ---------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------

பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்

## சுன்னாகம் இலங்கை வங்கி விரைவில் புதிய கட்டடத்தில்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இலங்கை வங்கி வெகுவிரைவில் தனது செயற்பாடுகளைத் தற்போதைய இடத்துக்கு முன் புதிதாக அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

முற்றிலும் கணினி மயமாக்கப்பட்ட இலங்கை முழுவதும் உள்ள இலங்கை வங்கி கிளைகளினூடே தொடர்புகளை மேற்கொள்ளக்கூடியவாறு அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தின் சம்பிரதாயபூர்வமான திறப்பு விழா ஜனவரி மாதமளவில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (101)

## தென்னங்கன்றுகள் மானியவிலையில்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தால் 500 தென்னங்கன்றுகள் பருத்தித்துறைப் பிரதேசங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டன.

இவற்றில் கற்கோவளம் புனித நகர் கிராமங்களுக்கு 300 தென்னங்கன்றுகளும், ஏனைய கிராம சேவகர் பிரிவுகளுக்கு மிகுதி 200 தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டதாக பருத்தித்துறைப் பிரதேச செயலக அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.(14)

## பிரதேச செயலகத்துக்கு புதிதாக நியமனங்கள்

தென்மராட்சி பிரதேச செயலகததுகது கணக்குப் பதியுநர் ஒருவரும், எழுதுநர் ஒருவரும் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

பொது நிர்வாக அமைச்சால் க. கார்த்திகா எழுதுநராகவும், எஸ். இராகசுதன் கணக்குப் பதியுநராகவும் நியமிக்கப்பட்டு, தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (24)

## வீதி திருத்தப்படவுள்ளது

வலி. கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ள சியாக்காட்டு சுடலை வீதி திருத்தப்படவுள்ளது. இதன் ஆரம்பக்கட்ட வேலைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்த வீதியில் சியாக்காட்டு சுடலை, சவாரித்திடல் என்பன அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (75)

## செயலமர்வில் பங்குபற்றிய ஆசிரியருக்கு கொடுப்பனவு

தென்மராட்சி கல்விவலய பாடசாலை ஆசிரியர்களுக்கு நவம்பர் 28,30 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட பாடசாலைமட்ட கணிப்பீட்டுச் செயலமர்வுகளில் பங்குபற்றியவர்களுக்கான கொடுப்பனவு, எதிர்வரும் 21 ஆம் திகதியன்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (29)

## உதவிப் பொருட்கள் வழங்கல்

இந்தியாவிலிருந்து மீள நாடு திரும்பிய ஒரு தொகுதியினருக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இவர்களுக்கான உதவிப் பொருட்கள் ஐ.ஓ.எம் நிறுவனத்தால் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கபபடவுள்ளது.

மீளத் திரும்பியவர்களை அன்றைய தினம் யாழ். பிரதேச செயலகத்துக்கு வருகை தந்து உதவிப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## திக்கம் மயானத்தை புனரமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடலரிப்பால் சேதமடைந்த திக்கம் பொது மயானத்தை புனரமைப்புச் செய்து தருமாறு, திக்கம் மத்திய சனசமூக நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த இந்த மயானம் கடலரிப்பால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

திக்கம், அல்வாய் கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த பெருமளவான மக்கள் இப்போது மயானத்தையே பாவிப்பதால் கடலரிப்பிலிருந்து பாதுகாத்து, இதனைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## விளையாட்டு கழகங்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கூட்டம் - எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அல்லது செயலாளர் கலந்து கொள்ளுமாறும், கலந்துகொள்ளாத விளையாட்டுக் கழகம் தை மாதம் நடைபெறுகின்ற பிரதேச செயலக விளையாட்டில் கலந்துகொள்ள முடியாது எனவும் விளையாட்டு உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (72)

## விளம்பரப் பலகைகள் அகற்றப்படவுள்ளன

சாவகச்சேரி நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள், பதாகைகள் என்பவற்றை அகற்ற நகரசபை அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு விளம்பர பலகைகள், பதாகைகளை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வைப்பதாயின் சாவகச்சேரி நகரசபையின் அனுமதி பெற்றே வைக்கமுடியும்.

எனவே அனுமதிபெற்ற பின்பே இந்த விளம்பரப்பலகையை வைக்க முடியுமென நகரசபை அலுவலகம் அறிவித்துள்ளது. (29)

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு

சுழிபுரம் திக்கரை தமிழ்த்தாய் சனசமூக நிலையத்துக்கும், பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலைக்கும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது நிதியத்தில் இருந்து நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளனர்.

திக்கரை தமிழ்த்தாய் சனசமூக நிலையத்துக்கு சுற்றுமதில் அமைப்பதற்கென ஒரு லட்சம் ரூபாவும், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் வித்தியாசாலையின் தேவைக்கென 15 ஆயிரம் ரூபாவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதியத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தற்போது இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் திட்டமிடப்பட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் இந்த வேலைகள் யாவும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்குள் முடிக்கப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (207)

# நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தி வவுனியாவில் தெருவெளி நாடகம்!





துன்பப்படும் மக்களின் ஐக்கியப்பாட்டுடனான குரலே நிரந்தர சமாதானத்திற்கு வழிசமைக்கும் என்ற தொனியில் வவுனியாவில் தெருவெளி நாடகம் கிராமங்கள் தோறும் நடாத்தப்பட்டு வருகின்றது.

வவுனியா அரங்காலயா அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரால் நிரந்தர சமாதானம் ஏற்பட மக்களின் பங்கு மற்றும் துன்பத்தின் இருளில் வாழும் மக்களின் துயர நிலை பற்றிய எடுத்தியம்பும் வகையில் தெருவெளி நாடகம் மூலம் பறைசாற்றி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக நேற்றுமுன்தினம் சிதம்பரபுரம், எல்லப்பர் மருதங்குளம் போன்ற கிராமங்களில் நாடகம் நடைபெற்றது.

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் இணைந்து நடாத்தும் இந்தத் தெருக்கூத்தில் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் மூலமே இன்றைய சமாதானம் கேள்விக்குறியாகியுள்ளது எனவும் அவரவர் தமது தொழில்களை விடுத்து ஜாதி, மதம், இனம் என்ற போர்வையில் சிக்குண்டு உள்ளதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனவும் எடுத்தியம்பும் வகையில் இந்த நாடகத்தினை நடாத்தி வருகின்றனர்.

இதில் ஐக்கியப்பட்ட மக்கள் சக்தியே சமாதானத்தின் முன்னெடுப்புக்கான வழி என வலியுறுத்தும் வகையில் அமைந்ததுடன் யுத்தமோ - சமாதானமோ அது மக்களின் மனங்களில் இருந்தே பிறக்கிறது, பிறக்க வேண்டும் என்ற கோஷமும் வலியுறுத்தப்பட்டது.

## இலவச கணினி பயிற்சிநெறி

(பளை)

பளைப் பிரதேசத்தில் அரச ஊழியர்களுக்கான கணினிப் பயிற்சிநெறி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த இலவச கணனிப் பயிற்சி வகுப்பில் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 20 அரச ஊழியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். மூன்று மாத காலம் இந்தப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியால் பளைப் பிரசேத்தில் அமைந்துள்ள உப அலுவலகத்திலேயே இந்தப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன. (122)




## 20 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் மூன்று முறிப்பு - துணுக்காய் இடையிலான வீதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மூன்று முறிப்பு, துணுக்காய் வீதி புனரமைக்கப்படாமையால் இந்த வீதியால் போக்குவரத்து செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோககி வருகின்றனர்.

வவுனியா - பூவரசங்குளத்திலிருந்து இரணை இலுப்பைக்குளம், விளாத்திக்குளம், மூன்றுமுறிப்பு, நட்டாங்கண்டல் துணுக்காய் ஊடாகச் செல்லும் 30 கிலோமீற்றர் நீளமான வீதி கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது பாரிய குன்றும் குழியுமாக இருப்பதால், இந்த வீதியால் மக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த வீதியைப் பிரதான வீதியாகக் கொண்ட 16 கிராமங்களைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், எந்தவொரு வாகனத்திலும் இந்த வீதியூடாக பயணக்க முடியாதநிலை காணப்படுகிறது.

## அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் எதிர்வரும் 22 ஆம் திகதி திறப்பு!

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி, பின்னர் வவுனியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்த கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் - பல்வேறு தரப்பினரதும் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் கிளிநொச்சியிலேயே இயங்கவுள்ளது.

இதற்கான புதிய அலுவலகத்தை வட பிராந்திய அஞ்சல் மா அதிபர் நா.ஜெயரத்தினம் எதிர்வரும் 22 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார். (31)

## சமகால அரசியல் விழிப்புணர்வு கருத்தரங்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாங்குளம் பிரதேசத்தில் சமகால அரசியல் விழிப்புணர்வுக் ,கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் இன்றைய சமாதான நிலைப்பாடு தொடர்பாகவும், சமாதானம் என்ற பொய்மையிலிருந்து மக்களை விழிப்படையச் செய்யும் வகையில் அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும், வீடு வீடாகப் பிரசாரமும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் அன்பளிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி - மாயவனூரில் அமைந்துள்ள பொது மண்டபத்துக்கு நியாப் திட்ட நிறுவனத்தினரால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதில் சூரிய மின்கலம், மின்குமிழ்கள், மாணவர்கள் படிப்பதற்கான மேசை, கதிரை போன்ற பொருடகளே அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின் உதவியால் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பயன் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## மீண்டும் ஒரு போர் ஏற்படுமானால் அது தமிழீழத்தையே பெற்றுத்தரும்

### தமிழர் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம்

மீண்டும் ஒரு போர் ஏற்படுமானால் அது நிச்சயமாக தமிழீழத்தையே பெற்றுத்தரும். ஏனெனில் இந்தப் போரில் தமிழீழ மக்கள் அனைவருமே கலந்து கொள்ளப் போகின்றார்கள் என, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் தெரிவித்தார்

சுகவீனம் காரணமாக சாவடைந்த லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் இறுதி அஞ்சலி நிகழ்வும், வீரவணக்கக் கூட்டமும் தாளையடியில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கையில் -

பிறப்பு, இறப்பு என்பன ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. ஆனால் இறப்பவர்கள் சிலர் எச்சங்களை இந்த மண்ணில் விட்டுச் செல்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களே நினைவு கூரப்படுகின்றார்கள். அவற்றின் வரலாறுகள் எழுதப்படுகின்றன. அப்படிப்பட்ட ஒருவரே இந்த மறவன் மாஸ்ரர் என அவர் தெரிவித்தார்.

கடற்புலிகளின் மூத்த உறுப்பினரான இவரது வித்துடல் யாழ். குடாநாடு முழுவதும், வன்னிப் பெருநிலப்பரப்பு எங்கும் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு - அவரது சொந்த இடமான தாளையடியில் கடந்த வியாழக்கிழமை இறுதி அஞ்சலிக்கு வைக்கப்பட்டு மாலை 5 மணியளவில் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

இதையொட்டி வடமராட்சி கிழக்கில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. பிரதேசம் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (122)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்க 4.5 மில்லியன் தேவை

### கிளிநொச்சி அரச செயலகம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வன்னிப் பிரதேசத்தில் அண்மையில் பெய்த பெருமழை காரணமாக பாதிப்புகள் தொடர்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் 9 ஆயிரத்து 238 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவில் 3 ஆயிரத்து 122 குடும்பங்களும், கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் 2 ஆயிரத்து 323 குடும்பங்களும், பளை உதவி அரச அதிபர் பிரிவில் 2 ஆயிரத்து 231 குடும்பங்களும், பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1,562 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

இவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்கு 4.5 மில்லியன் ரூபா தேவையென கிளிநொச்சி அரச செயலகம் தெரிவித்துள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### தொற்றுநோய் ஏற்படும் அபாயம்

(கிளிநொச்சி)

தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்பில் தொற்றுநோய்களின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாக - குறிப்பாக வைரஸ் காய்ச்சலின் நோய்த்தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாக வன்னி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக்காலமாக இந்தப் பிரதேசங்களில் காணப்படும் வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சை பெற்றவர்களில் எழுபது வீதமானோர் வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

### சுகாதார வசதியற்ற உணவகங்கள் இயங்கத் தடை

கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதார வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளற்ற உணவகங்கள் - எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இயங்குவதற்குத் தடைவிதிக்கப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மலசலகூட வசதிகள் மற்றும் பாதுகாப்பான கிணறு போன்றவை இல்லாத உணவகங்களுக்கே இவ்வாறு தடைவிதிக்கப்படவுள்ளது.

அடிப்படை வசதிகள் இல்லாத உணவகங்கள் இனிவரும் காலங்களில் தேநீர்ச்சாலையாக இயங்குவதற்கே அனுமதி வழங்கப்படும் எனவும், பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (122)

### நாய்களின் தொல்லையால் மக்கள் கடும் விசனம்

மன்னார்- இலுப்பைக்கடவையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

கள்ளியடி, அந்தோனியார்புரம், ஆத்திமோட்டை, புதுக்குளம் போன்ற கிராமங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதுடன், இந்தப் பகுதிகளில் நாய்கடிக்கு இலக்காவோர் தொகையும் அதிகரித்துள்ளது.

இந்த வாரம் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளமை குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியும், எதுவித நடவடிக்கையும் இதுவரையில் மேற்கொள்ளாமை குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

### அடிப்படை வசதியின்றி இயங்கும் அம்பகாமம் பாடசாலை

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அம்பகாமம் பாடசாலை அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருகிறது. இந்தப் பாடசாலை தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்டு இயங்குகிறது.

இந்த நிலையில் இங்கு ஒரு ஆசிரியர் மட்டும் கற்பித்தலில் ஈடுபட்டுவருகிறார்.

இந்தப் பாடசாலையின் கட்டடம் நிரந்தரமாகவுள்ளபோதும், புதிதாக இன்னுமொரு கட்டடம் நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

எனவே ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டுமென பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### ஓமந்தைச் சாவடியில் கெடுபிடிகள் அதிகரிப்பு

வவுனியா - ஓமந்தை சாவடியில் இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

ஓமந்தை இராணுவத்தினரின் சோதனைச் சாவடியூடாக பயணிக்கும் மக்களிடம் இராணுவத்தினரும், புலனாய்வுத் துறையினரும் கடுமையான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் தற்காலிக அடையாள அட்டைகள் வைத்திருக்கும் பயணிகள் திரும்பி அனுப்பப்படுகின்றனர்.

இவ்வாறு மக்கள் மத்தியில் அச்சமூட்டும் செயற்பாடுகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் உதவி!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு பிரதேசத்தில் அண்மையில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக, நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளன.

விசுவமடு பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர்.

வள்ளிபுனம் பிரதேசத்தில் 550 குடும்பங்களும், உடையார்கட்டு வடக்குப் பிரதேசத்தில் 356 குடும்பங்களும், உடையார்கட்டு தெற்குப் பிரதேசத்தில் 252 குடும்பங்களும், றெட்பானா பிரதேசத்தில் 245 குடும்பங்களும், தேராவில் பிரதேசத்தில் 320 குடும்பங்களும், விசுவமடு பிரதேசத்தில் 575 குடும்பங்களும் வீடுகள் முற்றாகப் பாதிப்புற்ற நிலையில் இடம்பெயர்ந்துள்ளன.

குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் என இந்த முகாம்களில் தங்கியுள்ள மக்களை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் பராமரித்து வருகிறது.

இவ்வாறான ஆறு முகாம்களையும் நல்லமுறையில் பராமரிப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் தாம் எடுத்துள்ளதாகவும் -

தமது செயற்பாட்டுக்கு விசுவமடு பிரதேச அரசியற் துறையினரும் பேராதரவு நல்கி வருவதாகவும் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் யூட் தெரிவித்தார்.